மாலை : 49 மணி : 11 நவம்பர் 2007 விலை ரூ. 10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு



உ
சிவமயம்

# அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருக்கோயில்



தக்ஷிணாமூர்த்தி
திருவலிதாயம்-பாடி, சென்னை

**ஓம் நமோ பகவதே**
**தக்ஷிணாமூர்த்தியே!**
**மஹ்யம் மேதாம் பிரக்ஞாம்**
**ப்ரயச்ச ஸ்வாஹா**

(தமிழக அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்திற்குட்பட்டது)

## திருவலிதாயம் (குருஸ்தலம்) பாடி

அம்பத்தூர் வட்டம், சென்னை - 600 050. போன் : 2654 0706

**குருபெயர்ச்சி 3 நாட்கள் சிறப்பு இலட்சார்ச்சனைவிழா**

**நாள் : 14.11.07, 15.11.07, 16.11.07**

பேரன்புடையீர்!

தொண்டை நாட்டு பாடல் பெற்ற 32 சிவாலயங்களில் ஒன்றானதும், வியாழ குரு வழிபட்டு பாப நிவர்த்தி பெற்றதன் காரணமாக திருவலிதாயம் குருஸ்தலம் எனப் பெயர் பெற்றதும், தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர், வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் மற்றும் பாம்பன் சுவாமிகள் உள்ளிட்ட அருளாளர்களால் பாடப் பெற்றதும், ஆலங்குடி தென்குடிதிட்டை, கோவிந்தவாடி, திருச்செந்தூர் போன்ற முக்கிய குருஸ்தலங்களில் ஒன்றானதும், சூரியன் - சந்திரன் - இந்திரன் - இமயன் - ஸ்ரீமகாவிஷ்ணு - ஸ்ரீ ராமர் - ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ பரத்வாஜ மாமுனிவர் ஆகியோரால் பூஜிக்கப்பட்டதுமான அருள்மிகு ஜெகதாம்பிகை உடனுறை திருவல்லீஸ்வரர் திருக்கோயிலில் நிகழும் சர்வஜித்து வருடம் ஐப்பசி மாதம் 30-ம் தேதி (16.11.2007) அதிகாலை 4.50 மணிக்கு அருள்மிகு குருபகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுசு ராசிக்கு குருபெயர்ச்சியாவதை முன்னிட்டு அருள்மிகு தட்சிணாமூர்த்தி மற்றும் குருபகவானுக்கு, குருபெயர்ச்சி சிறப்பு இலட்சார்ச்சனை விழா 14.11.2007, 15.11.2007 மற்றும் 16.11.2007 ஆகிய 3 நாட்களில் மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது.

**குருப்ரிகார சாந்தி செய்து கொள்ள வேண்டிய ராசிதாரர்கள் :**
**ரிஷபம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம்**

**இலட்சார்ச்சனை கட்டணம் ரூ. 125/- நேரில் / தபாலில்**
**அருள்மிகு குருபகவான் உருவம் பொறித்த 2 கிராம் வெள்ளி டாலர் இலட்சார்ச்சனை பிரசாதத்துடன் வழங்கப்படும்.**
**குரு பெயர்ச்சிக்கு திருவலிதாயம் வருக! குருவருள் பெற்று வளமுடன் வாழ்க!**

**குறிப்பு :**
நேரில் வர இயலாத பக்தர்கள் இலட்சார்ச்சனை கட்டணம் ரூ. 125/- நிர்வாக அதிகாரி, மேற்படி திருக்கோயிலின் பெயரில் மணியார்டர், வங்கி டிராப்ட் ICICI வங்கி கணக்கு எண். 602701217206-ல் செலுத்தி பெயர், ராசி, நட்சத்திரம், லக்னம், கோத்ரம், விவரம் தெரிவித்து தபால் மூலம் வெள்ளி டாலர் மற்றும் விபூதி பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம்.

**வழித்தடம் :** அம்பத்தூர் - ஆவடி மார்க்கம் CITY BUS STOP - LUCAS - TVS பாடி (படவட்டம்மன் கோவில்) கோயம்பேடு - அம்பத்தூர் O.T. - திருமங்கலம் (Bus Depot) 3 கி.மீ. தொலைவில்




திரு. **வெ. சாரங்கபாணி**
நிர்வாக அதிகாரி M.A., B.L.,

திரு. **பி.எஸ். சண்முகசுந்தரம்**
பரம்பரை அறங்காவலர்

## குருபகவானுக்கு தனி சன்னதி :

குருபெயர்ச்சியை முன்னிட்டு இத்திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் வியாழ குரு பகவான் தனி சன்னதியில் சிறப்பு அபிஷேக ஆராதனையுடன் மூன்று நாட்கள் லட்சார்ச்சனை விழா மிக சிறப்பாக நடைபெறும்.




# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு | ஆண்டு 2038 மணி 11 | ஸர்வஜித்-ஐப்பசி நவம்பர் 2007


## அன்பார்ந்த வாசகப்பெருமக்களே!

ஒளிவிழாவாகிய தீபாவளித் திருநாள் புராண இதிகாசங்களின்படி தீமையை அழித்து நன்மையை நிலைநிறுத்தச் செய்தநாள்; குழந்தைகளுக்கு குதூகல நாள்; புதுமணத் தம்பதியருக்கு தலைத் தீபாவளி எனும் மறக்கவொன்ன நாள்; பெரியவர்களுக்கு தங்களது வாழையடி வாழைகளுடன் கொஞ்சிக்குலவி களிப்பு கொள்ளும் நாள்; குடும்பத் தலைவனுக்கு இதமான சுமைகளுடன் இன்பமளிக்கும் நாள். இத்தீபாவளித் திருநாளினை அனைவரும் கொண்டாடி மகிழ்ந்திட இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

முருகப் பெருமான் சூரபதுமனை வென்று தேவர்களையும், முனிவர்களையும் அனைத்து உயிர்களையும், காத்தருளியமையைப் போற்றி வழிபட்டு கொண்டாடி மகிழும் விழா கந்தசஷ்டி விழா. செந்தமிழ் அன்பும், சிவநெறிப் பற்றும் உடைய முருகன் அடியார்கள் அனைவருக்கும் இவ்விழா புனிதமும் சிறப்பும் வாய்ந்ததாகும்.

சட்டியில் (சஷ்டியில்) இருந்தால் (விரதம் இருந்து வழிபட்டால்) அகப்பையில் (அகமாகிய வயிற்றின் கண் உள்ள கருப்பையில் வரும்) (மகப்பேறு வாய்க்கும்) என்பது திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்தின் ஐந்தாம் அருட்குரவர் சீலத்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகளின் கூற்றாகும். இச்சிறப்புமிக்க கந்த சஷ்டி விழாவும் ஐப்பசித் திங்களில் வருகிறது.

கந்த சஷ்டி விரதத்தை கருத்துடன் கடைப்பிடித்து முருகனை வழிபட்டால் எல்லா நலன்களும் எய்தலாம் என்பது திண்ணம்.

"தில்லையில் காண, காசியில் இறக்க
சிறக்கும் ஆரூர் தனிற் பிறக்க
எல்லையில் பெருமை அருணையை நினைக்க
எய்தலாம் முக்தி" - எனும் நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலைத் திருத்தலத்தின் கார்த்திகையில் வரும் திருக்கார்த்திகைத் தீபத் திருவிழாவிலும் கலந்து கொண்டு அண்ணலின் அருளினைப் பெற வேண்டுகிறேன்.

பெரியபுராணத்தில் ஆண்டவனுக்கு அடியவர்கள் அமுதூட்டியது, ஆண்டவன் அன்பர்களுக்கு அமுதூட்டியது. ஆண்டவன் அன்பர்களுக்கு அமுதூட்டி மகிழ்வது, அடியவர்கள் அடியவர்களைப் போற்றி மகிழ்வூட்டுவது என்ற மூன்று நிலைகளையும் சேக்கிழார் பெருமான் விவரித்துள்ளமையை பூசை.அருணவசந்தன் அவர்கள் வழங்கியுள்ளார்.

தொழிலுக்குப் பயன்படும் கருவிகளை காட்சிப் பொருளாக மட்டும் வைத்துக் கொண்டாடாமல் அவற்றை எல்லா நாட்களும் செயல்படுத்தி, தொழில்புரிந்து நாட்டை உயர்த்துதலே உண்மையான சரசுவதி பூசை என பாரதி கண்ட சரசுவதி பூசையினை "பாரதியின் சரஸ்வதி பூசை" எனும் தலைப்பில் வழங்கியுள்ளார் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள்.

திருவரங்கத்தமுதனாருக்கு இராமாநுசரிடமிருந்த ஈடுபாட்டை "அமுதனாரும் அந்தாதியும்" எனும் தலைப்பிலும், கந்த சஷ்டியின் மகிமையும், இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

இராமலிங்க வள்ளலாரின் உலக அமைதிச் சிந்தனைகளைத் தொகுத்து வழங்கியுள்ளார் டாக்டர் எம்.எஸ். ஈஸ்வரன் அவர்கள். டாக்டர் சரசுவதி இராமநாதன் அவர்களின் "கந்தரனுபூதித் தொடரும்", செந்தமிழ்வாரிதி முனைவர் இரா. செல்வக்கணபதி அவர்களின் "சைவமும் தமிழும்" தொடரும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

திண்டுக்கல், அருள்மிகு அபிராமி அம்மன் திருக்கோயில் வரலாறும், குரு தலங்களாக விளங்கும் ஆலங்குடி, அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில் மற்றும் சென்னை பாடியில் அமைந்துள்ள திருவலிதாயத் திருக்கோயில் சிறப்புகளும், உறையூர் அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில் சிறப்புகளும் இவ்விதழில் திருத்தல உலாவாக வெளிவந்துள்ளன.


இருள் அகற்றும் சூரியன், சந்திரன், அக்கினி, ஓசை எனும் நால்வகை விளக்கினை, அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் "விளக்கு" எனும் தலைப்பில் நயம்பட எடுத்துரைத்துள்ளமை அவரது நினைவலைகளாக இவ்விதழில் வெளிவந்துள்ளது.

அனைவரும் இதழினைப் படித்து இன்புற வேண்டுகிறேன்.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.,)
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்


இந்து சமய அறநிலையத் துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர். கலைஞர் அவர்களின் தலைமையில் 17.10.2007 அன்று தலைமைச் செயலகத்தில் திருக்கோயில் உயர்நிலை ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவரும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சருமான திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், குழுவின் உறுப்பினர் செயலரும், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையருமான திரு.த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், குழுவின் உறுப்பினரும், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலருமான திரு.து. இராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள், குழுவின் உறுப்பினர்களான குன்றக்குடி திருவண்ணமாலை ஆதினம் தவத்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக அடிகளார் அவர்கள், திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் கயிலை குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள், திரு. கருமுத்து கண்ணன் அவர்கள், பன்னாரி அம்மன் சர்க்கரை ஆலையின் நிர்வாக இயக்குநர் திரு.எஸ்.வி. பாலசுப்பிரமணியன் அவர்கள், சிறப்பு அழைப்பாளர் தருமபுர ஆதீனத்தின் திருவையாறு பிரிவு தம்பிரான் சுவாமிகள் மற்றும் திருவரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், திருவாடுதுறை ஆதினகர்த்தர் தவத்திரு. சிவப்பிரகாச பண்டார சந்நிதி ஆகியோரின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., அவர்கள், நிதித்துறை செயலாளர் திரு.ஞ. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



17.10.2007 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழுள்ள 25 திருக்கோயில்களில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் குடும்பங்களுக்கு, குடும்ப நலநிதியுதவித் தொகையாக தலா ரூ. 75,000.- வீதம் வழங்கினார். தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு.து. இராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு.த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், திருக்கோயில் உயர்நிலை ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களான குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம் தவத்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக அடிகளார் அவர்கள், திருகயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் கயிலை குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள், பன்னாரி அம்மன் சர்க்கரை ஆலையின் நிர்வாக இயக்குநர் திரு.எஸ்.வி. பாலசுப்பிரமணியன் அவர்கள், ஆகியோர் உடன் இருந்தனர்.





## இதழின் உள்ளே

1. அருள்மிகு தென்முகக் கடவுள் 108 போற்றிகள் 4
2. பாரதியின் சரசுவதி பூசை தமிழாகரர் தெ. முருகசாமி 6
3. அமுதனாரும் அந்தாதியும் திரு. என்.எஸ். தாத்தாச்சாரி 9
4. பெரிய புராணம் கூறும் அமுதூட்டிய அடியவர்கள் பூசை. ச. அருணவசந்தன் 12
5. கந்த சஷ்டியின் மகிமை சித்தாந்த இரத்தினம் செ.வே. சதாநந்தன் 15
6. திண்டுக்கல் அருள்மிகு காளகத்தீசுவரர்சுவாமி திருக்கோயில் 17
7. சென்னையில் ஒரு குருஸ்தலம் திருவலிதாயம் (பாடி) 21
8. விளக்கு - அருண்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் (நினைவலைகள்) 22
9. உறையூர் அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில் 24
10. வேலும் மயிலும் துணை - டாக்டர். சரசுவதி இராமநாதன் 27
11. ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில் 29
12. சைவமும் தமிழும் - செந்தமிழ் வாரிதி முனைவர் இரா. செல்வக்கணபதி 31
13. இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பாவில் உலக அமைதிச் சிந்தனைகள் டாக்டர் என்.எஸ். ஈஸ்வரன் எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி., 33
14. அண்ணாமலையானே போற்றி 37

# அருள்மிகு தென்முகக் கடவுள்

## 108 போற்றிகள்




1. ஓம் அகரமுதல் அனைத்தும்ஆனாய் போற்றி
2. ஓம் அநாதியாம் முப்பொருள் காட்டினாய் போற்றி
3. ஓம் அநாதியே உற்ற தெய்வமே போற்றி
4. ஓம் அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
5. ஓம் அருளாய் நிறைந்த அமுதே போற்றி
6. ஓம் அருளே முதலாய் ஆனாய் போற்றி
7. ஓம் அலைபுனல் சூடிய அரனே போற்றி
8. ஓம் அல்லல் அறுக்கும் அறத்தாய் போற்றி
9. ஓம் அறம்முதல் நான்கும் அருளினாய் போற்றி
10. ஓம் அறிஞர்க் கறிவாய் நின்றாய் போற்றி
11. ஓம் அறிவின் உருவாய் அமர்ந்தாய் போற்றி
12. ஓம் அற்புதம் நிகழ்த்தும் அருளே போற்றி
13. ஓம் ஆகமம்ஆகி அண்ணிப்பாய் போற்றி
14. ஓம் ஆடாதே தெற்கில் அமர்ந்தாய் போற்றி
15. ஓம் ஆணையால் உலகை ஆள்வாய் போற்றி
16. ஓம் ஆதிபகவனாய் அமர்ந்தாய் போற்றி
17. ஓம் ஆதியாய் நின்ற அமலா போற்றி
18. ஓம் அறியா ணாகி அருளினை போற்றி
19. ஓம் ஆலின் கீழ் நால்வருக் கருளினை போற்றி
20. ஓம் ஆனந்த அருள்மழைக் கண்ணாய் போற்றி
21. ஓம் ஆன்மப் பொருளைத் துலக்கினாய் போற்றி
22. ஓம் இசையில் திளைத்த இசைவே போற்றி

23. ஓம் இடதுகால் ஊன்றிய ஏந்தலே போற்றி
24. ஓம் இருமையை நீக்கும் இடையே போற்றி
25. ஓம் இன்ப உருவின் எழிலாய் போற்றி
26. ஓம் உபதேசக் கலையின் ஒளியே போற்றி
27. ஓம் உயர்வுறு பரமகுருவே போற்றி
28. ஓம் உயிர்க்கெலாம் உயிராய் நின்றாய் போற்றி
29. ஓம் உருவெலாம் கடந்த ஒருவ போற்றி
30. ஓம் ஏகன் அனேகன் இறைவா போற்றி
31. ஓம் ஏகாந்த அனுபவம் இயற்றுவாய் போற்றி
32. ஓம் ஒளிமயமான உருவ போற்றி
33. ஓம் ஒன்றான ஆனந்த உருவே போற்றி
34. ஓம் ஓங்கார நாதத்து ஒருவ போற்றி
35. ஓம் ஓங்கு குருபர நாதனே போற்றி
36. ஓம் ஓங்குயிர் ஞான சிவமே போற்றி
37. ஓம் ஓம்எனும் பிரணவம் உணர்த்தினாய் போற்றி
38. ஓம் ஓம்பரப் பிரம்ம ஒளியே போற்றி
39. ஓம் ஔவியம் போக்கும் அருளே போற்றி
40. ஓம் கண்டிகை ஏந்தும் கரத்தாய் போற்றி
41. ஓம் கயிலைத் தென்திசைக் கடவுளே போற்றி
42. ஓம் கருணைக்கடலாய் நின்றாய் போற்றி
43. ஓம் கலையெலாம் புனைந்த கவினே போற்றி
44. ஓம் கல்லாடை புனைந்த கலையே போற்றி
45. ஓம் கல்லாலின் கீழமர் கடவுள் போற்றி
46. ஓம் சச்சிதானந்த சிவமே போற்றி
47. ஓம் சதாசிவத் தென்முகக் கடவுள் போற்றி
48. ஓம் சரியை முதல் நான்கும் தந்தாய் போற்றி
49. ஓம் சனகாதி நால்வருக் கருளினை போற்றி
50. ஓம் சித்தம் மருவும் செம்பொருளே போற்றி
51. ஓம் சித்தர்கட் கெல்லாம் சிற்குரு போற்றி
52. ஓம் சித்தி அருள் முத்திரையாய் போற்றி
53. ஓம் சித்திகள் பலவாய்த் திகழ்வாய் போற்றி
54. ஓம் சிந்தனைக் கரிய சிவமே போற்றி
55. ஓம் சிவஞானப் புத்தகம் ஏந்தினாய் போற்றி
56. ஓம் சிவயோக நிலையருள் செல்வா போற்றி
57. ஓம் சின்முத்திரை அருள் சிவனே போற்றி
58. ஓம் சுட்டு விரலாற் சுட்டுவோய் போற்றி
59. ஓம் சொற்பதம் கடந்த தொல்லோய் போற்றி
60. ஓம் ஞானத்து உறவை நல்குவாய் போற்றி
61. ஓம் ஞானத்தொரு தெய்வம் ஆனாய் போற்றி
62. ஓம் ஞானம் விளக்கும் நாயகா போற்றி
63. ஓம் தத்துவ விளக்கம் காட்டினாய் போற்றி
64. ஓம் தந்திர கலைதனைத் தந்தாய் போற்றி
65. ஓம் தமிழின் பொருளாய் நின்றாய் போற்றி
66. ஓம் தவமெலாம் போற்றும் தவமே போற்றி
67. ஓம் தற்பதப் பொருளாய் நின்றாய் போற்றி
68. ஓம் திருநின்ற செம்மைச் செல்வா போற்றி
69. ஓம் தீரத் துறந்த திருவே போற்றி
70. ஓம் துரியம் கடந்த சுடரே போற்றி
71. ஓம் தூண்டா விளக்கின் சோதி போற்றி
72. ஓம் தூய நன்ஞானச் சுடரே போற்றி
73. ஓம் தெற்கமர் பரம பதியே போற்றி
74. ஓம் தேவர்கட் கெல்லாம் தேவனே போற்றி
75. ஓம் தூயனாய்த் துணையாய் நின்றாய் போற்றி
76. ஓம் நவயோக நந்தியாம் நாதா போற்றி
77. ஓம் நன்னெறி காட்டும் நாயகா போற்றி
78. ஓம் நாகப் புரியணி நாதா போற்றி
79. ஓம் நிலவை முடியில் நிகழ்த்தினாய் போற்றி
80. ஓம் நிறைவாய் நின்ற நிலையே போற்றி
81. ஓம் நிறைவுறு ஞானப் பொலிவே போற்றி
82. ஓம் நீறணி நெற்றிக் கண்ணாய் போற்றி
83. ஓம் பசுபதியாய் நின்ற பரம போற்றி
84. ஓம் பத்தி நெறிக்கோர் வித்தகா போற்றி
85. ஓம் பரஞானச் செஞ்சுடர் பரம போற்றி
86. ஓம் பரமபதி யெனும் பக்குவ போற்றி
87. ஓம் பரமானந்தப் பரமனே போற்றி
88. ஓம் பன்முக ஞானம் பரப்பினாய் போற்றி
89. ஓம் பிறவிப் பிணிக்கோர் மருந்தே போற்றி
90. ஓம் பெருவிரல் தத்துவம் பேசினாய் போற்றி
91. ஓம் பொய்த்தவப் போக்கைப் போக்குவாய் போற்றி
92. ஓம் மங்கலம் கருதும் சங்கரா போற்றி
93. ஓம் மந்திரக் கலையில் மகிழ்ந்தாய் போற்றி
94. ஓம் மலமாயை கன்மம் மாற்றினாய் போற்றி
95. ஓம் மறையெலாம் புகழும் மணியே போற்றி
96. ஓம் மனக்கவலை மாற்றும் மருந்தே போற்றி
97. ஓம் முதுமறை நான்காய் முகிழ்த்தாய் போற்றி
98. ஓம் மும்மலப் பேயை முனிவாய் போற்றி
99. ஓம் முயலகன்மேல் கால் ஊன்றினாய் போற்றி
100. ஓம் முனிவர்க்கே ஞானம் மொழிந்தாய் போற்றி
101. ஓம் மூன்று விரலை முகிழ்த்தாய் போற்றி
102. ஓம் மேதா தட்சிணா மூர்த்தியே போற்றி
103. ஓம் மோனத் திண்மொழி மலர்ந்தாய் போற்றி
104. ஓம் வலக்கால் மடித்து வைத்தவா போற்றி
105. ஓம் வன்பெலாம் தீர்க்கும் மருந்தே போற்றி
106. ஓம் வான்பொருள் வழங்கும் வள்ளலே போற்றி
107. ஓம் வீணை ஏந்தும் வித்தகா போற்றி
108. ஓம் வையகம் காத்தாய் போற்றி போற்றி

நிறைவாக அந்தந்த திருத்தலத்திற்கு உரிய பாடல் ஒன்றினை ஓதிப் போற்றியை நிறைவு செய்யலாம்.

# பாரதியின் சரசுவதி பூசை


தமிழாகரர் தெ. முருகசாமி,
புதுச்சேரி-9

நாமகளைச் சரசுவதி என்பர்,. நாக்குதான் மொழியின் பிறப்பிடம். மொழி இல்லையேல் மனிதவாழ்வு இல்லை. இந்த உண்மையை ஓரளவு உணர்த்துவார் போலவே அய்யன் திருவள்ளுவர்,

**"நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று (641)"**

என்றார். நாக்கிருந்தும் விலங்குகள் பேசுவதில்லை. விலங்கைப் போல் வாழ்ந்த மனிதன் பைய நாவை அசைத்தசைத்து ஒலியை உண்டாக்கி, அவ்வொலியால் உள்ளத்திலிருக்கும் உணர்வுகளை அடுத்தவருக்கு வெளிப்படுத்தியதால் மனிதனுக்கு எதிரில் உள்ளவரும் அவ்வாறே உணர்வுகளை வெளிப்படுத்திய அளவில் கருத்துப் பரிமாற்றம் உருவாக உருவாகச் சிந்தனை வளர்ந்தது. இடையறாத இச்சிந்தனை வளர்ச்சிக்கு மொழிதான் காரணமானதால் அம்மொழி பிறந்த நாக்கினைத் தெய்வமாகக் கருதும் நிலையில் மொழிவளர்ந்த நாவினைச் சுட்டியே 'நாமகள்' என்ற தெய்வக் கோட்பாட்டைத் தமிழர்கள் புகுத்துணர்ந்து போற்றத் தலைப்பட்டனர்.

பொதுவாக எல்லாக் கலைகளும் தொழில்களும் மொழியால் கிளைத்தன. இதனை நினைவுகூர்ந்து மகிழும் விதமாகவே புரட்டாசித் திங்களில் கலைமகள் விழாவைக் கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டது. எல்லாக் கலைகளுக்கும் தொழிலுக்கும் அறிவே ஆதாரம். அந்த அறிவு கல்வி சரசுவதியைப் போற்ற, அவ்விழா கொண்டாடப்பட்டது.



அறிவுபூர்வமாகச் செய்யும் தொழிலே தெய்வம் என்பதால் சரசுவதி பூசை கலைமகள் விழாவாகப் போற்றப்பட்டது. இதைத் தான் மகாகவி பாரதியார் **"கை வருந்தி உழைப்பவர் தெய்வம், கவிஞர் தெய்வம்"** என்றார்.

எமக்குத் தொழில் கவிதை எனப் பிரகடனப்படுத்திய பாரதியார், கவிதை எழுதப் பயன்படும் எழுத்தாணியும் ஏடும் அவருக்குத் தெய்வமாகக் காணப்பட்டன. ஏடும் எழுத்தாணியும் காட்சிப் பொருளாக அல்லாமல் அவைகள் தொழில்படும் போதுதான் அதாவது பயனுடையதாக ஆகும்போதுதான் தெய்வீகம் ஆகின்றன. அதனால்தான் **"வஞ்சமற்ற தொழில் புரிந்து உண்டு வாழும் மாந்தர் குலதெய்வமாவாள்"** எனச் சரசுவதியை எல்லா உருவாக்கத்திற்கும் காரணமானவளாகப் பாரதியார் போற்றினார்.

இத்தகு தெய்வத்தை எப்படி வணங்குவது

எனக் கூறும்போதும் தொழில்புரிவோர் அனைவரும் அவரவர் தொழிலுக்குப் பயன்படுத்திய கருவிகளைக் காட்சிப் பொருளாக மட்டும் வைத்துக் கொண்டாடாமல் அவற்றைச் செயல்பாட்டுக்குரியதாக ஆக்குவதையே உண்மையான சரசுவதி பூஜை என்கிறார். வெற்றுச் சடங்கு பூசை ஆகாது என்பது கருத்து.

**"செந்தமிழ்மணி நாட்டிடை யுள்ளீர்**
**சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!**
**வந்தனம் இவட்கே செய்வது என்றால்**
**வாழி யஃதிங்கு எளிதன்று கண்டீர்**
**மந்திரத்தை முணுமுணுத்து ஏட்டை**
**வரிசையாக அடுக்கி அதன்மேல்**
**சந்தனத்தை மலரை இடுவோர்**
**சாத்திரம் இவள் பூசனை யன்றாம்."**

வெள்ளைத் தாமரை என்ற தலைப்பில் உள்ள இப்பாடலால் பாரதியார் எல்லா நாளிலும் தொழில் செய்வதையே சரசுவதி பூஜையாகக் கருதுகிறார் எனத் தெரிகின்றது மேலும் சீனம், யவனம், துருக்கி போன்ற கடல் தாண்டிய நாடுகளில் தொழிற்கல்வி ஒளிர்ந்து ஓங்குவதுபோலப் பாரத நாடும் ஓங்கு கல்வி உழைப்பால் நாளும் உயர்வதையே சரசுவதி பூசையாக அறிவுறுத்துகிறார். இதுவரை இங்ஙனம் நம்நாடு உயரவில்லையானாலும்

**"போன தற்கு வருந்துதல் வேண்டா**
**புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்"**

என்ற அறைகூவல், கூட்டாகத் தொழில்புரிந்து நாட்டை உயர்த்துதலே உண்மையான சரசுவதி பூசை என்பதைத் தெளிவுபடுத்துகிறது எனலாம். இவ்வுண்மையை வற்புறுத்துவார் போல **'மாதர் தீங்குரல் பாட்டில் இருப்பாள்'** என்ற பாடலில் **"கோதகன்ற தொழில் உடைத்தாகிக் குலவு சித்திரம் கோபுரம் கோயில்"** போன்றவற்றில் சரசுவதி வீற்றிருப்பதாகப் பாரதியார் பாடியுள்ளார். ஈண்டு, கோதகன்ற தொழில் என்றது சிந்திக்கத் தக்கதாகும்.

எந்தத் தொழிலும் வாழ்விற்குகந்த தானாலும் அந்தத் தொழில் குற்றமற்றதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதன் பயனை உண்மையாக அனுபவிக்க முடியும். அதனால்தான் **'வஞ்சமற்ற தொழில்புரிந்துண்டு வாழும் மாந்தர் குலதெய்வமாவாள்'** எனத் தொழிலாகவும் தொழிலின் பயனாகவும் சரசுவதியை மீண்டும் வணங்கிப் பாடுகிறார் அவர். முடிவாக, அறிவே தெய்வம் என்ற அடிப்படையில் அறிவை வளர்க்கும் கல்வியைப் பூசித்தலே சரசுவதி பூசை எனக் கூறுவார் போல,

**"அன்ன யாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்"**

என்றவர் "இப்பெருந்தொழில் நாட்டுவம் வாரீர்" என்று ஒட்டுமொத்த சமூகத்தையே தொழில்மயமான சரசுவதி பூசைக்குத் தயார்படுத்தினார் பாரதியார் எனலாம்.

இச்சரசுவதி பூசையை நவராத்திரி என ஒன்பது நாள் விழாவாகக் கொண்டாடும் வழக்கம் பெருவழக்கமாக வளர்ந்துவிட்டது. எங்கெங்குக் காணினும் சக்தியடா என்ற பாவேந்தர் கூற்றுப்படி இந்த உலகமே சக்தி வடிவம். அணு முதல் அண்டம் வரையிலான இயக்கம் அனைத்திலும் ஊடுருவி உள்ளது சக்தி ஒன்றே. சக்தியை





ஆற்றல் என்பர். கண்ணுக்குத் தெரியாத இவ் ஆற்றல், தொழில்படு கருவியால் உணரப்படும் போதுதான் அது தெய்வத்தன்மையுடையதாகக் கருதப்பட்டு வழிபாட்டிற்குரியதாகிறது. இக்கோட்பாட்டின்படி ஆயுதங்களின் பயன்பாட்டால் ஆயுத பூசை என்ற பெயரையும் சரசுவதி பூசை பெற்றாலும் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முப்பரிமாண ஆற்றல்களால் உலகம் இயங்குகிறது என்ற உண்மையை உணர்ந்த போது அவைகளைப் போற்றும்விதமாக அவ்வாற்றல்களுக்கான கடவுளர்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டாடப்பட்டனர்.


மேற்கண்ட உண்மையின்படி அறிவால் உலகம் படைக்கப்படுகிறது என்பதன் குறியீடாகக் கல்விமகள் கலைமகளின் கணவன் பிரம்மன் படைப்புக்கடவுள் எனப்பட்டான். வாழும் வாழ்க்கை பொருளுடையாக இருக்க செல்வமாம் பொருள் தேவை என்ற அடிப்படையில் பொருளுக்குத் தேவதையான இலக்குமியின் கணவன் திருமால் காத்தற்குரியவனானார். தோற்றம் உண்டேல் மரணம் உண்டு. இம்மரணம் என்பது முற்றிலும் அழிவு என்பதைக் குறிக்காமல் உருமாறிய வேறொரு தன்மையைக் குறிப்பது என்ற வகையில் எல்லாவற்றையும் அழித்து உருமாற்றும் வீரத்தையுடைய கொற்றவையின் கணவன் சிவன் அழித்தற்கடவுளாகக் கூறப்பட்டான்.

இப்படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று ஆற்றல்களின் உண்மையைக் கண்டு கொண்டாடும் விழாவாக அமைந்தது நவராத்திரி விழா. ஆற்றலாம் சக்தியைப் பெண்ணாகப் போற்றல் என்ற மரபுப்படி கலைமகள், அலைமகள் (இலக்குமி) மலைமகள் என்ற மூவர்க்கும் விழா எடுக்கும் வழக்கம் உருவானது. அந்த வகையில் பாரதியார் வாணி (சரசுவதி) ஸ்ரீதேவி (இலக்குமி) பார்வதி என்ற மூவர்க்கும் நவராத்திரி என்ற தலைப்பில் ஒவ்வொரு பாடல்பாடி வணங்கியது போலவே சரசுவதி காதல், இலட்சுமி காதல், காளி காதல் என்ற தலைப்புகளிலும் அம்மூவரை வணங்கிப் பாடல்பாடி நவராத்திரியைச் சிறப்பித்தார். இவ்வாறு மூன்று சக்திகளைத் தனித்தனியே பாடினாலும் இம்மூன்றும் ஒன்றே என்று பாடி "சர்வம் சக்தி மயம்" என்ற உண்மையை ஒரே பாட்டில் பாடி நவராத்திரியாம் சரசுவதி பூசையைச் சிறப்பிக்கிறார் பாரதியார்.

**"மாதா பராசக்தி வையமெல்லாம் நீ**
**நிறைந்தாய்**
**ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப்**
**பாரினிலே**
**ஏதாயினும்வழி நீ சொல்வாய் எமதுயிரே!**
**வேதாவின் தாயே! மிகப் பணிந்து**
**வாழ்வோமே!"**


திருக்கோயில்

திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

# அமுதனாரும் அந்தாதியும்

**முன்னுரை**

பேரின்பம் பெறுவதற்கு அடியார்களிடம் வைக்கும் பக்தியே சுருக்கு வழி என்பது எல்லாச் சமயவாதிகளின் ஒருமித்த கருத்தாகும். இதுவே தொல்வழியாகவும் அருள் வழியாகவும் போற்றப்படுகிறது. **"பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெறாதபயன் பெறுமாறு. வரிவாள் வாய் அரவணைமேல் வாட்டாற்றான் காட்டினனே"** என்று சடகோபர் திருவாய் மலர்ந்த தீதில் நன்னெறியும் இதுவே. ஸ்ரீவைணவ அடியார்களில் இவ்வழியில் சென்று பேறு பெற்றவர்கள், சிறப்பாக இருவர்களாவர். ஒருவர் மதுரகவி ஆழ்வார், மற்றொருவர் திருஅரங்கமுத்து அமுதனார் என்பவர்.

மதுரகவியோ, "தேவுமற்றறியேன்" என்றார். இவரோ "எங்கள் மாதவனே நிற்கிலும் காண்கில்லார்" என்றார். இராமாநுசருக்கு வேங்கடம். வைகுந்தம் பாற்கடல் என்றால் என்ன இன்பம் பயக்குமோ, அவ்வளவு இன்பம், அமுதனாருக்கு இராமாநுசன் திருப்பாதங்கள் என்றால் ஏற்படும். மதுரகவி, நம்மாழ்வார் திருவடிகளின் முன்தான் நின்று பாடினார் என்றால்: அமுதனாரோ இராமாநுசனை முன் நிறுத்தித் தான் பின் நின்று பாடினார் எனவாம். பாலில் சர்க்கரை இட்டதைப் போல்: இவர் மற்றைய ஆழ்வார்களில் பெருமை என்ற பாலில் இராமாநுசன் திருநாமமாகிய சர்க்கரையைக் கலந்தே பாடினார்.

**வரலாற்றுக் குறிப்பு**

அமுதனாரின் முழுப்பெயர், திருவரங்கத்தமுதனார் என்பது. மூங்கில் குடியில் அவதரித்து, திருவரங்கத்தில் வாழ்ந்தவர்! அரங்கன் கோயில் எரிமையாளராகவும் இருந்தார். முதன் முதலில் இவர் ஸ்ரீவைஸ்ணவ சமயத்தின் இன்சுவையை முற்றிலும் அறியாத நிலையில்தான் இருந்தார். இவர் தாயாரோ பாகவதர்களின் அமுத வாக்கில் அளப்பறியா ஈடுபாடு உள்ளவர். அவ்வப்பொழுது ஸ்ரீவைணவ சமயத்தின் அரும்பெரும் கருத்துக்களைக் கேட்டு மிகவும் இன்பம் கொள்வர். தாயார் இறந்தபின், ஒருநாள் அத்தாயாரின் திதி வந்தது. தாயாரின் திருவுள்ளத்திற்கிணங்க, அவள் ஆன்மா சாந்தி அடைய, அத்திதியில் ஓர் ஸ்ரீவைணவரை உண்பிக்க அமுதனார் விரும்பினார். ஸ்ரீ இராமாநுசரிடம் தம் கருத்தை வெளியிட்டார். கருணைக் கடலான இராமாநுசரும் தமது முக்கிய சிஷ்யரான கூரத்தாழ்வானை சிராத்த போஜனத்துக்கு அனுப்பினார். திதி முடியும் பொழுது மரபுப்படி (திருப்தோஸ்மி) "மனநிறைவு பெற்றேன்" என்று சொல்லவேண்டிய தருணம் வந்தது. கடைசியில் அமுதனாரிடமிருந்து திருவரங்கக் கோயிலின் திறவுகோலை வாங்கிக் கொண்ட பின்னரே கூரத்தாழ்வான் கூற வேண்டிய மரபுச் சொல்லை (திருப்தோஸ்மி)ச் சொன்னார்.

அமுதனாரிடமிருந்து பெற்ற சாவியைக் கூரத்தாழ்வான் இராமாநுசர் திருவடி முன் வைத்தார். சிரார்த்தத்தில் கிடைத்த பொருளையும் தக்கோர்களுக்குப் பகிர்ந்தார். பிறகு இராமாநுசரும் திருவரங்கம் பெரிய கோயிலில் செய்யத் திருவுள்ளம் பற்றிய சீர்திருத்தங்களைச் செய்தார். அதனால்தான் இன்றும் ஸ்ரீவைணவர்கள், "திருவரங்கச் செல்வம் வாழ்க!" என்றும், "இராமாநுசன் ஆணை வளர்க!" என்றும் எல்லாத் திவ்ய க்ஷேத்திரங்களிலும் நிச்சலும் அனுஸந்தானம் செய்கிறார்கள். அமுதனாரும் அன்று தொடங்கிக் கூரத்தாழ்வான் திருவடி பலம் கொண்டு ஸ்ரீஇராமாநுசரின் அணுக்கத் தொண்டரானார். 'இராமாநுசன் திருவடி நிலை' என்று பெயர் பெறும் பாக்கியவான்களுள் ஒருவரானார் என்றும் சிலர் கூறுவார்கள்.

இவருக்குக் கூரத்தாழ்வானிடம் அளவற்ற பக்தி உண்டென்பதற்கு, "வஞ்சமுக் குறும்பாம், குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடியபின்" என்ற இவருடைய அமுதவாக்கே சான்றாகும். இவருடைய கூரத்தாழ்வான் பக்தி, வெள்ளமிட்டு இராமாநுசர் என்னும் குணக்கடலில் கலந்தது எனலாம். இவருடைய ஆசாரிய பக்தியை எடுத்துக் கூறவோ, எழுதவோ சொல்லெல்லாம் போதாது, ஏடெல்லாம் அடங்காது. இவருடைய அளப்பரிய இராமாநுச பக்தி "கரைகட்டாக் காவிரிபோல" வெள்ளமெடுக்கவே, அவ்வெள்ள மெல்லாம் சொற்களாக மாறி "இராமாநுச நூற்றந்தாதி" என்ற மாபெரும் நூலாயிற்று என்பர்.


திரு. **என்.எஸ். தாத்தாச்சாரி**
தஞ்சை

இவ்வந்தாதியை முதலில் இராமாநுசன் ஏற்க மறுத்தார். பின்பு முதலியாண்டான், பிள்ளான் முதலிய சிஷ்யர்கள் வேண்டிக் கொள்ள, ஒருவாறு ஏற்கத் திருவுள்ளம் இசைந்தார். இந்நூலில் தமிழ்மொழியும், ஆசாரிய பக்தியும், கருத்தின் அழகும் களிநடம் புரியும் அருமையை வேறு நூல்களில் காண்பதரிது எனவும் கூறலாம். அஃது ஈடும் எடுப்புமில்லா அருமையான அந்தாதி யாகும்.

### அந்தாதி அமைப்பு

தமிழில் கூறப்படும் 96 வகைப் பிரபந்தங்களில் "அந்தாதி" என்று நால்வகையும் ஒன்றாகும். தொல்காப்பியம் இத்தகைய நூலை 'விருந்து' என அழைக்கிறது. ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்து, அசை, சொல், சீர், அடி இவற்றுள் ஒன்று. இதற்கு அடுத்த பாலின் முதலாக வரும்படிக்கு அமைத்துப்பாடி, இறுதிப்பாடலின் இறுதியும், முதற்பாடலின் முதலும் ஒன்றாக இணையும்படி மண்டலித்து மாலைபோலத் தொகுத்து முடிப்பது, அந்தாதியாகும் இதனைச் "சொற்றொடர் நிலை" என வழங்குதலும் உண்டு. வேறு விதமாக அந்தாதி பாடுவதும் உண்டு. "தனி அந்தாதி" என்ற வகையும் இவற்றுள் ஒன்றாகும். கலம்பகம், இரட்டை மணிமாலை, மற்றும் சித்தர்கள் இயற்றிய மருத்துவ நூல்களும் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலிய நூல்களும் அந்தாதி வகையில் பாடப்பட்டவைகள்.

திவ்வியப் பிரபந்தங்களில் அந்தாதி என்ற பெயராலே அமைந்த நூல்களும், அந்தாதியாகப் பாடப்பெற்ற திருவாய்மொழி போன்ற அருள் வாக்குகளும், அந்தாதி வகையில் அமைந்தன. அந்தாதி வகையிற் செய்யுள் எழுதும் வழக்கம் சங்க காலத்திலிருந்தே தொடங்கியது என்பது. காப்பியாற்றுக் காப்பியனார். பதிற்றுப்பத்துள் 4-ஆம் பத்தினை அந்தாதித் தொடையில் பாடியிருப்பதனால் தெரிகின்றது. சமய சமயத்தினரால் பாடப்பட்ட திருநூற்றந்தாதியும் மிகவும் புகழ்பெற்ற நூலாகும்.




இதுபோல் கம்பர் பாடிய சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, சேரமான் பெருமாள் நாயனார்பாடிய பொன்வண்ணத் தந்தாதி, குட்டித் திருவாசகம் எனப் போற்றப்படும் திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி, மிகவும் அண்மையில் பாடப்பட்ட அபிராமி அந்தாதி போன்ற நூல்களும் அந்தாதிப் பாடல்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன. கடவுள், ஆசாரியர்கள், அரசர்கள் இவர்களைப் பற்றிய அந்தாதிச் செய்யுள்கள் நூறு பாடல்களாலும், மற்றவர்களைப் பாடும்பொழுது நூற்றுக்குக் குறைந்த எண்ணிக்கையிலும் அந்தாதிப் பாடல் இயற்றுவது பெரியோர் மரபாகும்.

### இராமாநுச நூற்றந்தாதி

ஸ்ரீவைணவ ஸம்ப்ரதாய நூல்களில் அமுதனார் அருளிச் செய்த இராமாநுச நூற்றந்தாதியும், ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாய்மொழி நூற்றந்தாதியும், மிகவும் சிறப்புடையன. திருவாய்மொழி நூற்றந்தாதி திருவாய் மொழியின் ஒவ்வொரு பதிகத்தின் சாராம்சத்தை அமுதச் சொட்டென எடுத்துக் காட்டுகிறது. இராமாநுசர், ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் மூலம்தான் பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் என்ற பாஷ்யத்தை ஈடும் எடுப்புமில்லா வகையில் எழுதி முடித்தார் எனப் பெரியோர் துணிபாகும்.

இராமாநுசரது திக்கெட்டும் புகழ் பெருமையை இந்த நூற்றந்தாதியில் பரக்கப் பேசியதைப்போல் வேறெங்கும் பேசியதில்லை என்பதும், ஆசாரியர்களின் திருவுள்ளமாகும். இதனை இராமாநுசர் காலத்தில் நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள் 24இல் கடைசி ஆயிரமான இயற்பாவின் கடைசி பாகத்தில் சேர்த்துள்ளார்கள். மதுரகவியார் அருளிச் செயல், வேதம் தமிழ் செய்த மாறனை அல்லாது வேறொன்றும் அறியாத அருள் வாக்காகும். இந்த நூற்றந்தாதியோ கையில் கனி என்னக் கண்ணனைக் காட்டித்தரினும், இராமாநுசன் மெய்யில் பிறங்கிய நீரன்றி வேறொன்றும் வேண்டாத அமுத வாக்காகும்.

இந்நூலில் 108 செய்யுள்கள் உள்ளன. பாசுரம் தோறும் இராமாநுசன் புனிதத் திருநாமம் சொல்லப்படுவதால், ஒருதடவை இந்த அருள் நூலைப் படித்தால், இராமாநுசன் திருநாமம் 108 தடவை உச்சரிக்கப்பட்டதாகிறது. இதற்கு 'பிரபன்ன காயத்ரீ' எனவும் பெயருண்டு. காயத்ரீ மந்திரத்துக்குள்ள ஏற்றம்போல் இதற்கும் ஸ்ரீவைணவ சமயத்தில் பெருமதிப்பு உண்டு. இதற்குப் பல உரைகள் ஏற்பட்டுள்ளன. எனினும், மிகவும் எளிய முறையில் சுருக்கமாக யதீந்திரப் பிரவணர் என்ற மாமுனிகள் அருளிச் செய்த உரைக்கு அதிக மதிப்பு உண்டு.

இது திருவரங்கத்தில் பாடப்பட்ட நூலாகும். அரங்கன் பெருமை 15 இடங்களில் இந்நூலில் வருகிறது. ஒவ்வொரு ஆழ்வார்களின் தனிச் சிறப்பை இந்நூலாசிரியர் இரத்தினச் சுருக்கமாக ஒவ்வொரு சொல்லால் வெளியிடும் அருமை எல்லை கடந்ததாகும். 8-ஆம் பாசுரத்திலிருந்து 19-ஆம் பாசுரம் வரை பொய்கை ஆழ்வார் தொடங்கி நம்மாழ்வார் இறுதியாகப் பன்னிருவர் சிறப்பும் பேசப்படுகிறது. ஆழ்வார்களின் வரிசை முறை சிறிது மாறியும் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளது. நம்மாழ்வாரின் பெருமை முதற் பாசுரத்திலேயே இடம் பெற்றுள்ளது. திருவாய் மொழியின் பெருமையும் விளக்கப்படுகிறது. 2,17,88-ஆவது பாசுரங்களில் திருமங்கை ஆழ்வாரின் சிறப்பு இடம் பெற்றுள்ளது. மறைந்திருந்த திவ்வியப் பிரபந்தத்தை வெளியிட்டு ஸ்ரீவைணவ சம்பிரதாயத்தின் தலைசிறந்த ஆசிரியரான நாதமுனிகளும், அவர் திருப்பேரனான யமுனைத் துறைவரும் வணங்கப்படுகின்றனர். "அன்பால் இயம்பும் கலித்துறை அந்தாதி ஓதஇசை நெஞ்சமே" என்று சிறப்புப் பாயிரப் பாசுரத்தின் அடியால் இந்நூற் பாசுரங்கள் கட்டளைக் கலித்துறையில் எழுதப்பட்டன என்பதையும் அறியலாம்.

இவர் தமிழின் சிறப்பை, செந்தமிழ், தண்டமிழ், இன்தமிழ், ஈரத்தமிழ், வண்தமிழ், பசுந்தமிழ் என்ற சொற்களால் வெளியிடுகிறாரான படியால், தமிழின்பால் இவருக்குள்ள பெரும் மதிப்பு அளவிடற்கரியது என அறியலாம். திருவாய்மொழிக்கு நறுமணமும் உண்டு என்ற நுண்கருத்தைத் "திருவாய் மொழியின் மணம் தரும் இன்னிசை" என்ற அடியால் குறிப்பிடுகிறார். இவருடைய எல்லைகாணாத பெருமையை நன்கறிந்த மகான் ஸ்ரீவேதாந்த தேசிகன்.

**............................ முன்**
**பூசுரர்கோன் திருவரங்கத் தமுதனார்உன்**
**பொன்னடிமேல்அந் தாதியாகப் போற்றிப்**
**பேசிய நற்கலித் துறைநூற்றெட்டுப் பாட்டும்**
**பிழையலவே எனக்கு அருள்செய் பேணிநீயே**

என்ற பாசுரப் பகுதியால் இனிது புகழ்ந்து வெளியிட்டருளினார்.

**ஆழ்வார்களைப் பற்றிய புகழுரை**

மறையின் குருத்தின் பொருளையும், செந்தமிழ் தன்னையும் கூட்டினவர் பொய்கையாழ்வார் என்றும்: ஞானமென்னும் நிறைவிளக்கேற்றியவர் பூதத்தாழ்வார் என்றும்: தமிழ்த் தலைவன் பேயாழ்வார் என்றும்: பாரியலும் புகழ் பாண் பெருமாள் பாணநாதன் என்றும்: இடம் கொண்ட சீர்த்தியான் மழிசைவந்த சோதி என்றும்: பேராத சீர் அரங்கத்தய்யன் கழற்கணியும் பரன் தொண்டரடிப் பொடி என்றும்: கலைக்கவிபாடும் பெரியவர் குலசேகரன் என்றும்: பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன் பெரியாழ்வார் என்றும்: அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் ஆண்டாள் என்றும்: கண்ணமங்கை நின்றானைக் கலை பரவும் தனியானையைத் தண்டமிழ் செய்த நீலன் திருமங்கை ஆழ்வார் என்றும்: எய்தற்கு அரிய மறைகளை, ஆயிரம் இன் தமிழால் செய்தற்கு உலகில் வரும் சடகோபன் நம்மாழ்வார் என்றும் புகழ்ந்து பாடியுள்ளார்.

இத்தகைய ஆழ்வார்களைத் தன் ஆருயிராகக் கொண்டவர் தனக்கு ஆரமுதமான இராமாநுசனே என அருமையாகப் பாடும் அழகை நூலைப் பயின்றே அறியவேண்டும். இவருக்கு இராமாநுசரிடம் உள்ள ஈடுபாட்டைக் குறிக்கும்பொழுது.

**"பொருந்திய தேகம் பொறையும் திறலும்**
**புகழும் நல்ல**
**திருந்திய ஞானமும் செல்வமும் சேரும்**
**செறுகவி யால்**
**வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்து**
**எடுத்து அளித்த**
**அருந்தவன் எங்கள் இராமாநுசனை அடை**
**பவர்க்கே"**

என்ற 32-ஆம் பாசுரத்தால் குறிப்பிடுகிறார். இராமாநுசனாகிய காமதேனு, அருட்பால் நம்பால் சுரக்க வேண்டின், அமுதனார் என்ற இளங்கன்றை நினைப்போமாக!

**"இனி என்குறை நமக்கு?**
**எம்பெருமானார் திருநாமத்தினால்**
**முனி தந்த நூற்றெட்டுச் சாவித்திரி**
**என்னும் நுண்பொருளைக்**
**கனி தந்த செஞ்சொற் கலித்துறை**
**அந்தாதி பாடித் தந்தான்**
**புனிதன் திரு அரங்கத்து**
**அமுதாகிய புண்ணியனே"**

# பெரியபுராணம் கூறும் அமுதூட்டிய அடியவர்கள்



இளையான்குடி
மாறநாயனார்



குங்குலியக்
கலய நாயனார்

பெரியபுராணம் காட்டும் அடியவர்கள் பல்வேறு திறத்தினர். அவர்கள் தத்தம் நிலைக்கேற்பச் சிவத்தொண்டில் ஈடுபட்டிருந்தனர். எளிய நிலையில் துணி துவைத்துக் கொடுத்தது முதல் மகனையே கறி சமைத்து அரிய பெரிய விருந்து வைத்தது வரை அவர்கள் செய்த செயல்கள் யாவும் அருஞ்செயல்களாகும்.

அவர்கள் அனைவருமே அடியவர்களுக்கு உணவிட்டு மகிழ்ந்திருப்பார்கள் என்றாலும், ஒரு சிலர் செய்த அமுதூட்டல் மட்டும் தனிச்சிறப்புடன் குறிக்கப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

இளையான்குடிமாறனார் வறுமை வந்த காலத்தும் தளராது அமுதூட்டும் பணி செய்தவர். அடை மழை பொழியும் ஒரு நள்ளிரவில் எதுவும் வீட்டில் இல்லாத போது அடியவர் வந்து விருந்து கேட்க, அவருக்கு வயலில் விதைத்த நெல்லை வாரி வந்து அரிசியாக்கி அமுதளித்துப் பேறு பெற்றுள்ளார். அவரைத் தேடிவந்து இறைவன் உணவு கேட்டுப் பெருமைப்படுத்தி அருள் புரிந்தார். சேக்கிழார் அவர் செய்த அமுதூட்டலை "சீலமார்அன்பர் பூசை" என்று கூறுகிறார்.

அமர்நீதி நாயனார் நல்லூரில் வாழ்ந்த அன்பர். அவர் அந்தி வண்ணர். அடியவர்க்கு அமுது செய்து வந்ததுடன் தக்க அன்பர்கள் அமுது செய்யத் திருமடம் அமைத்தார் என்று அவருடைய புராணம் கூறுகிறது. அம்மடம் அமர்நீதி நாயனார் மடம் என்றழைக்கப்பட்டது.

குங்குலியக் கலயனார் அவனருளால் பெற்ற பெருஞ்செல்வத்தைக் கொண்டு சீருடை அடிசில், செழுங்கறி, தயிர், நெய், பால் ஆகியவற்றை அன்பர்களுக்கு இட்டார்.

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் உடன் வந்த அடியார்களுக்கு அமுது செய்வித்து மகிழ்ந்தனர். அவர்கள் பணிக்கு முட்டு வந்தபோது இறைவன் படிக்காசு நல்கி



அமர்நீதி
நாயனார்



அப்பூதியடிகள்



திருநீலநக்கர்



சிறப்புலி நாயனார்

அந்த அறம் தொடர்ந்து நடைபெறச் செய்ததைக் காண்கிறோம். அவர்கள் ஆங்காங்குத் திருமடம் அமைத்து அன்பர்களுக்கு உணவூட்டி மகிழ்ந்தனர்.

காரைக்காலம்மையார் அடியவர்களுக்கு அமுதூட்டும் பணியை அன்புடன் செய்தவர். ஒரு சமயம் அவர் செய்த அமுதூட்டுதலே அவருடைய தெய்வீக சக்தி வெளிப்படக் காரணமாயிற்று. அதுவே அவரது வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்தது.

அப்பூதி அடிகளார் அமுதூட்டும் பணியினை அன்புடன் செய்தவர். அவர் நாவுக்கரசருக்கு அமுதூட்ட ஏற்பாடு செய்தபோது அவர் மகன் பாம்பு கடித்து இறந்தான். அதை மறைத்து அவர் அமுது படைக்க ஏற்பாடு செய்ததையும் உண்மையை அறிந்த அப்பர் அடிகள் மகனை உயிர்ப்பித்ததையும் பெரிய புராணம் கூறுகிறது.

திருநீலநக்கர் மறையவர் குலத்துதித்தவர். அவர் சிவபூசையுடன் அடியவர் பூசையையும் சிறப்புடன் செய்து வந்தவர். அன்பர்க்கு அமுது செய்விப்பது அவர் பணியாயிருந்தது.

மூர்க்க நாயனார் எப்பரிசாயினும் (எவ்வழியாக இருந்தாலும்) அதன்மூலம் பொருள் சேர்த்து அடியவர்களுக்கு அமுதுபடைக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார். அதனால் சூதாடிய பணத்தில் அவர் சோறூட்டி மகிழ்ந்தார்.

சிறப்புலியார், சோமாசிமாறர் முதலியோர் அடியவர்களின் பாதம் பணிந்து அன்னம் படைத்ததைக் காண்கிறோம். கலிக்கம்ப நாயனார் போஜனம், விரும்பு கறி, பால், தயிர், நெய் ஆகியவற்றுடன் அமுது செய்வித்து வந்தவர். முனையடுவார் பலவகையாக உணவு படைத்து மகிழ்ந்தவர்.

இவர்கள் யாவரும் செய்ததற்கு மேலாக தமது ஒரே பிள்ளையைக் கறி சமைத்தளித்து அமுதூட்டிப் பெரும்பேறு பெற்றவராகச் சிறுத்தொண்டர் விளங்குகிறார்.

பெரியபுராணத்தில் அடியவர்களுக்கு அமுதூட்டுதல் அரன்பணியாகவே சொல்லப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் புராணத்தில் "மண்ணினிற் பிறந்தார் பெரும்பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுதுசெய்வித்தல் உண்மையாமெனில் உலகர்முன் வருக" என்று குடத்தில் எலும்புகளாக இருந்த அங்கம் பூம்பாவையை அழைக்கிறார்.



மூர்க்க நாயனார்



சோமாசி மாறநாயனார்



கலிக்கம்ப நாயனார்

இதன் மூலம் அடியவர்களை அமுதூட்டுவதால் ஆயுளை நீட்டிக்க முடியும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. திருஞான சம்பந்தர் திருமயிலைப் பதிகத்தில் உருத்திரப் பல்கணத்தார்க்கு அட்டிட்டல், அருந்தவர்கள் துய்ப்பதுவும், நேரிழையார் கொண்டாடும் ஒண் புழுக்கல் என்று சோறு படைக்கும் நிகழ்ச்சிகளை விவரிக்கிறார்.

பெரியபுராணத்தில் ஆண்டவனுக்கு அடியவர்கள் அமுதூட்டியது, ஆண்டவன் அன்பர்களுக்கு அமுதூட்டி மகிழ்வது. அடியவர்கள் அடியவர்களைப் போற்றி அமுதூட்டுவது ஆகிய மூன்று நிலைகளையும் சேக்கிழார் விவரித்துள்ளார்.

- நன்றி : பூசை. ச. அருணவசந்தன் (எ) பூசை. ச. ஆட்சிலிங்கம் ஸ்ரீ விருந்திட்டீசுவரர் சிவமஞ்சரியின் 49வது மலர்.



சிறுத் தொண்டர்

# எண்ணச்சிதறல்

கொங்கு நாட்டின் திருத்தலங்களில் ஒன்றாய் விளங்கும் சிவன்மலை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலின் வரலாற்று சிறப்புக்களைப் படம் பிடித்துக் காட்டிய கட்டுரை பரவசத்தில் ஆழ்த்திவிட்டது.

நாளும் நலம் தரும் நாமக்கல் நரசிம்மப் பெருமாள் திருத்தலத்தின் மகத்துவங்களை விவரித்த கட்டுரையும் வண்ணப் புகைப்படங்களும் புரட்டாசித் திருநாளில் பெருமாளை தரிசித்த ஆனந்தம் கொண்டோம்.

**- த. சத்தியநாராயணன், அயன்புரம்**

சிவன்மலை என்ற அந்த சிறப்பான திருத்தலம் எனது கிராமத்திற்கு மிக அருகாமையிலிருந்தும், இதுகாறும் அந்த ஆலயத்திற்குச் சென்றுவரும் பாக்யம் ஏனோ எனக்குக் கிட்டவில்லை அப்படிப்பட்ட எனக்கு, சிவன்மலை படியேறி அந்த சிவமைந்தனைக் கண்குளிர தரிசித்து வந்த மன நிறைவினைத் தந்திருந்தது, சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி என்ற கட்டுரையும் படங்களும்.

அட்டையை அலங்கரித்திருந்த அருள்மிகு ஈச்சனாரி விநாயகரின் அழகிய வண்ணப்படம் கண்களை விட்டு அகலாத வகையில் அமைக்கப் பெற்றிருந்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க சிவபுரம் சிவாலயம் பற்றிய கட்டுரையை இம்மாத திருக்கோயில் இதழில் படித்து அகமகிழ்ந்தேன். காரணம் அந்தப் பழமையான ஆலயத்தின் தொன்மையான வரலாறு இதுவரை நான் அறிந்திராத ஒன்று. அதைவிட வியப்பளித்திருந்தது என்னவென்றால் நதிநீர் பங்கீடு விஷயத்தில் அக்காலத்திய மக்கள் செய்து முடித்திருக்கும் அரிய சாதனை குறித்த தகவல்கள்தான். இதைப் போன்ற பல்வேறு நலத்திட்டங்களுக்கு வழிகாட்டிச் சென்றிருக்கும் இத்திருக்கோயிலின் இனிய வரலாறு, அந்தக் காலக்கட்டத்திற்கே அழைத்தும் சென்றிருந்ததென்றால் இது மிகையாகாது. அதே போன்று ஸ்ரீபெரும்புதூருக்கு அன்றைய பெயர் பராந்தகச்சேரி, கூவத்திற்கு மதுராந்தகநல்லூர் போன்ற தகவல்கள் கட்டுரைக்குச் சிறப்புச் சேர்த்திருந்தன. மொத்தத்தில் வரலாற்றுப் பொக்கிஷமாகக் கருதப்பட்டு வரும் இந்த அற்புத சிவாலயத்திற்கு எப்போது சென்று வருவது? என்ற மிகப்பெரிய ஏக்கத்தினை என்னுள் தோற்றுவித்திருந்தது கட்டுரை.

**- இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி**

சித்தாந்த இரத்தினம்
பாம்பனார் - வாரியார் அடிப்பொடி
**செ.வே. சதாநந்தன்**

# கந்த சஷ்டியின் மகிமை

முருகன், குமரன், குகன், கந்தன், ஆறுமுகன் என்றெல்லாம் பக்தர்களால் புகழப்பெறும் செந்தமிழ்க் கடவுளின் பல்வேறு விழாக்களில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற விழாவே கந்த சஷ்டிப் பெருவிழாவாகும். சஷ்டி என்றால் ஆறு என்று பொருள். எனவே சஷ்டி விழா ஆறுநாள் விழாவாகும். கச்சியப்ப சிவாசாரியரின் கந்த புராணமும், பாம்பன் சுவாமிகளின் முதல்வன் புராண முடிப்பும் இவ்விழாவை விளக்குகின்றன.

தேவர்களைக் கொடுமைப்படுத்திய சூரபதுமன், அவன் தம்பிகளாகிய தாருகன், சிங்க முகன் ஆகியவர்களோடு முருகப் பெருமான் போரிட்டு வென்று தேவர்களை சிறைமீட்டு,



திருச்சீரலைவாய், சூரசம்ஹாரம் - திருக்காட்சி

அவர்களுக்கு ஆட்சியுரிமை தந்து, தேவருலகை வாழ வைத்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது கந்த சஷ்டிப் பெருவிழா, செவ்வேட் பரமனாகிய கந்தனுக்கும், சூரபதுமனுக்கும் போர் நடைபெற்ற இடம் திருச்செந்தூர்.


போருக்குப் பின்னர் முருகன் இந்திரன் மகளாகிய தெய்வ யானையை மணம் செய்த இடம் திருப்பரங்குன்றம். அது ஏழாம் நாள் விழா.

செந்தமிழ் நாட்டில் நடைபெற்ற வரலாற்றை மையமாகக் கொண்ட செந்தமிழ்க் கடவுளின் தெய்வப் பெருவிழாவே கந்த சஷ்டிப் பெருவிழா. ஆன்மாக்களுக்கு அல்லது மானிட உயிர்களுக்கு மூன்று வகையான அழுக்குகள் உண்டு. மூலமாகிய முதல் அழுக்கே ஆணவம். அதை ஒட்டி ஆன்மாக்களுக்கு உண்டாகிய இரண்டு அழுக்குகள் உண்டு. அவைகள் மாயை, கன்மம் எனப்பெறும். மாயையானது உலக பெருள்களில் கவர்ச்சியை உண்டாக்கி ஆன்மாக்களுக்கு மோகத்தை உண்டு பண்ணும். ஞானிகளைக் கூட மயங்க வைத்துவிடும். மயக்கத்தை உண்டாக்குதலும், ஆன்மாக்களை உலகப் பொருளின் மேல் பற்று முதலியவைகளை ஏற்படுத்துதலும் ஆகிய இரண்டு வகைகளில்

செயற்படுவது மாயை, சூரபதுமனின் ஒரு தம்பியாக நின்ற தாருகனே மாயை மயமாக நின்று செயல்படுபவன்.

அடுத்த அழுக்கானது கன்மம். இதுவும் இரண்டு வகைப்படும். நல்வினை, தீவினை என சிங்கமுகன் கன்மமயமாக நின்றவன்.

மூன்றாவது மூல அழுக்கே ஆணவம். இதுவும் நான் என்றும், எனது என்றும் செயல்படும். சூரபதுமன் ஆணவ மயமாக நின்றவன். மூன்று அழுக்குகளும் ஆறாகப் பிரிந்து செயல்பட்டன. ஆகையால் ஆறு நாட்களில் அவைகளை அழித்து ஆன்மாக்களுக்கு உண்மை ஞானம் கொடுத்தான் கந்தன் என்பதே கந்த சஷ்டிப் பெருவிழாவின் தத்துவம்.



இந்த மூன்று அழுக்குகளிலிருந்து நீங்கிய மனிதனின் ஆன்மா இறைவனடி சேர்ந்து இன்புற்றிருக்கும். உலகமும், உலக பொருள்களும் இறைவன் படைப்புகள் என்று உணர்ந்தால் மாயையிலிருந்து விடுபடலாம். தீவினைகளை எப்போதும் செய்யக்கூடாது. நல்வினைகளைச் செய்யும்போது அவைகள் நம் முயற்சியென்று கருதாமல், அவைகளை இறைவன் நம் மூலமாகச் செய்விக்கிறான் என்று உணர வேண்டும். அப்போது நல்வினைப் பயன் நம்மைச் சாராது, மறுப்பிறப்பும் ஏற்படாது. அறவாழ்க்கையை மேற்கொண்டு, எப்போதும் இறைவனைச் சிந்தித்து எல்லா நிகழ்வுகளும் அவனால் நிகழ்கின்றன என்று கருதினால் ஆணவத்திலிருந்து விடுபடலாம்.

இத்தத்துவத்தை நம் கையிலுள்ள ஐந்து விரல்கள் மூலம் அறியலாம். பெருவிரல் இறைவனையும் அதற்கடுத்த ஆள்காட்டி விரல் ஆன்மாவையும், மற்ற மூன்று விரல்கள் முறையே ஆணவம், கன்மம், மாயை ஆகியவைகளைக் குறிக்கும். ஆள்காட்டி விரல் மற்ற மூன்று விரல்களோடு இணைந்திருப்பது ஆன்மா, ஆணவம், கன்மம், மாயை ஆகியவைகளுடன் இணைந்திருப்பதைக் குறிக்கும். ஆள்காட்டி விரல் மற்ற மூன்று விரல்கள் இணைப்பிலிருந்து விலகி சற்று வளைந்தவுடன் பெருவிரலை அடைய முடியும். அதாவது ஆன்மா ஆணவம், கன்மம், மாயை ஆகியவைகளிலிருந்து விடுபட்டால் இறைவனடி சேரும். தட்சணாமூர்த்தி சுவாமிகளின் 'சின்முத்திரை' இந்தத் தத்துவத்தைக் குறிக்கும்.

இறைவனுக்குத் தேங்காய் படைப்பதும் இத்தத்துவத்தைக் குறிக்கும். பச்சைமேல்மட்டை மாயையும், நார் கன்மத்தையும், ஓடு ஆணவத்தையும் குறிக்கும். இம்மூன்றும் நீக்கப்பட்டவுடன் தேங்காயின் வெள்ளைப் பருப்பு சுத்த ஆன்மாவைக் குறிக்கும்.

கந்தப் பெருமான் சூரபத்மனை வென்று அவனைத் தன் மயில் வாகனமாகவும், சேவற் கொடியாகவும் மாற்றினான். சிங்க முகாசூரன் உமையம்மையின் சிங்க வாகனமாக மாற்றப்பட்டான். கந்த சஷ்டி விரதத்தை முறையாக அனுஷ்டித்து கந்தப் பெருமான் திருவடியடைந்து நிலைத்த இன்பம் பெறுவோம்.

# அருள்மிகு காளகத்தீசுவரர் சுவாமி

**அமைவிடம்**

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டம் காடுகாண் காதையில்

**"அலறுதலை மாரமும் உலறுதலை ஓமையும்**
**பொரியரை உழிஞ்சிலும் புன்முளி மூங்கிலும்**
**வரிமரல் திரங்கிய கரிபுறக் கிடக்கையும்**
**நீர் நகை இ வேட்கையின் மானின்று விளிக்கும்**
**கானமும் எயினர் கடமும் கடந்தால்**
**ஐவன வெண்ணெலும் அறைகட் கரும்பும்**
**கொய் பூந்தினையும் கொழும்புன வரகும்**
**காயமும் மஞ்சளும் ஆய் கொடிக் கவலையும்**
**வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்**
**மாவும் பலாவும் சூழுடுத்தோங்கிய**
**தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்"**

என இளங்கோவடிகளால் புகழப்படும் சிறுமலை அடிவாரத்தில் அமைந்துள்ள திண்டுக்கல் நகரின் மையப்பகுதியில் திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்கு மேற்கே சுமார் 1 கல் தொலைவில் ஸ்ரீ பத்மகிரிசர் சமேத அருள்மிகு அபிராமி அம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது.

**மூர்த்தி** : ஸ்ரீ பத்மகிரிஸ்வரர், ஸ்ரீ அபிராமி தேவி

**தலம்** : பத்மாசலம், திண்டீச்வரம்

**தீர்த்தம்** : குடகனாறு சந்தானவர்த்தினி பத்மபுஷ்கரணி, வருணதீர்த்தம், கதம்பதீர்த்தம்

ஸ்தல விருட்சம் : நெல்லிமரம்


**வழிபட்டு பேறு பெற்றவர்கள்**

பிரமன், அகஸ்தியர், வருணன், கார்த்திகைப் பெண்கள், பாண்டவர்கள், திண்டிமாசூரன், பொன்மானாகிய சுமேதன் என்ற அந்தணன், தூர்த்தஸ்வாமி, ரமணர், ஓதஸ்வாமிகள், பாஹு, சுபாஹு.

**தேவாரப்பாடல் பெற்ற வைப்புத்தலம்**

பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் இயற்றிய "பத்மகிரி நாதர் தென்றல் விடுதூது" என்ற அரிய நூலைப் பதிப்பித்த டாக்டர் உ.வே. சுவாமிநாத

# அருள்தரும் அபிராமி அம்மன் திருக்கோயில்



அய்யரவர்கள், அந்நூலின் முன்னுரையில்

"பத்மகிரியென்பது திண்டுக்கல்லின் திருநாமம் இதற்குத் திண்டீச்சுரம் என்ற திருநாமம் உண்டு. இது தேவார வைப்புத்தலங்களில் ஒன்று. இத்தல விருக்ஷம் நெல்லி. அதனால் இது நெல்லிவனம் என்றும் வழங்கும்" என்று கூறி

**"தெள்ளும் புனல் கெடில வீரட்டமும்**
**"திண்டிச்சுரமும் திருப்புகலூர்" என்றும்,**
**"திண்டீச்சுரம் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி**
**தேவூர் சிரபுரம் சிற்றேமம் சேறை" என்றும்**
**"கோடீச்சுரங் கொண்டீச்சுரம் திண்டீச்சுரம்**
**குக்குடேச்சுரம் மக்கீச்சுரம்" என்றும்**

அப்பர் பெருமான் பாடியருளிய தேவாரப் பாசுரங்களில் வரும் திண்டீச்சுரம் என்பது திண்டுக்கல்லையே குறிப்பன என்று முடிவு கட்டியிருக்கிறார். அப்படியாயின் அப்பர் காலம் 7ம் நூற்றாண்டு என்று கருதப்படுவதால் அந்நூற்றாண்டிலேயே இத்தலம் பிரபலம் அடைந்திருக்க வேண்டும் என்று யூகிக்கலாம்.

## திருக்கோயில் புராண வரலாறு

முழு முதல் கடவுளும், திருநீலகண்டரும் ஆகிய பரமேஸ்வரன், பார்வதி தேவியாரை திருக்கயிலையில் மணம்புரிந்த காட்சியை காண திருமால், நான்முகன், முப்பத்தி முக்கோடித் தேவர் என அனைவரும் கயிலாயம் சென்றனர். இதனால் வடகோடி தாழ்ந்து தென்கோடி உயர்ந்தது.

இதனை சமப்படுத்த பரமேஸ்வரன், அகஸ்தியரை தெற்கே பொதிகை மலை செல்லுமாறு கட்டளையிட்டார். அவ்வாறு அகஸ்திய முனிவரும் புறப்பட்டு வரும் வழியில் விந்தைய பருவதத்தின் கர்வத்தை அடக்கி வில்வலன், வாதாபி என்ற 2 அரக்கர்களை கொன்று தன் கமண்டலத்தில் உள்ள கங்கா தீர்த்தத்தை ஊர் காகம் கவிழ்த்ததின் காரணமாக காவேரி என்ற திவ்ய நதியும் உண்டாகியது.

பின்னர் அவர் தெற்கே வந்து கொண்டிருந்த போது லிங்காகாரமாக நின்ற ஓர் குன்றை பார்த்தார். அதன் தோற்றம் அகஸ்தியரை கவர்ந்தது. முக்கண் முதல்வனே இவ்வாறு சுயம்பு லிங்கமாய், பருவதாகாரமாய் ஆவிர்பவித்து இருப்பதை தனது ஞானதிருஷ்டியால் அவர் உணர்ந்தார். உடனே அந்த மலையை வலமாக வந்து வணங்கினார் அகஸ்தியர்.

இறைவனை பல்வேறு வகையில் போற்றி பாடி புகழ்ந்து மலையின் சிகரத்தை பார்த்தார். அங்கு தேவகணங்கள் புடைசூழ தவம் செய்து கொண்டிருந்த சத்தியலோகாதிபதியான பிரம்மாவை தரிசித்தார். அவரை வலம் வந்து வணங்கி தாங்கள் தவம் செய்யும் இம்மலையின் பெருமை பற்றி தாங்கள் உபதேசித்து அருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு பிரம்மா சந்தானவர்த்தி, கும்பநதி ஆகிய இரண்டு ஆறுகளுக்கு நடுவில் பலஜாதி விருட்சங்களும், புஷ்ப செடி கொடிகளும் நிறைந்து வளம் பொருந்திய நெல்லிவனத்தில் தேவர்களும், ரிஷிகளும் எப்போதும் இங்கு வந்து சுயம்பு மூர்த்தியை தரிசனம் செய்து பல நன்மைகளை அடைகின்றனர். இந்த நெல்லிவனத்தின் விஸ்தீரணம் ஒரு காத அகலம், ஒரு காத நீளமாகும்.



இப்பிரதேசத்தில் வசிப்பவர்கள் அதிகமான நன்மை அடைகின்றனர். இறைவன் மக்களுக்கு இகபர சுகங்களை நல்கி ரட்சிப்பதால் இந்த நெல்லிவனம் தாத்ரிவனம் என சிறப்பு பெயர் பெற்றது.

பத்மதீர்த்தத்தில் நீராடுவதும், பத்மகிரியை தரிசித்தலும், பத்மகிரியை வலம் வருவதும், அதற்கு அடுத்த அரசமர சேவை அனைத்தும் பாவங்களை உடனே போக்குவதாகும். நெல்லி இலையால் சகஸ்ரநாம அர்ச்சனை செய்பபவர்களும், பத்மதீர்த்தத்தால் பத்மகிரீஸ்வரருக்கு அபிஷேகம் செய்கின்றவர்களும், இம்மையில் சகல யோக பாக்கியங்களும் அனுபவித்து மறுமையில் முக்தி எய்துவர்.

இங்கு மூன்று நாள் வசித்தால், மலட்டு

பெண்களும், பண்புமிக்க புத்திரர்களை அடைவர். கார்த்திகை பெண்கள் அறுவரும் இத்தலத்தில் வசித்து பத்மதீர்த்தத்தில் நீராடி ஈசனை வழிபட்டதால் தேவர்களால் வணங்கப்படும் சண்முக பெருமானையே புத்திரர்களாய் அடைந்து பாலூட்டி சிறப்பு எய்தினர், என பிரம்மா கூறினார்.

அதற்கு அகத்தியர் கிருத்திகை பெண்கள் எதற்காக இங்கு வசித்தனர் என்ற காரணம் கூறுமாறு கேட்டார். பிரம்மா, தக்கனுடைய புத்திரிகள் 27 பெண்களை சந்திரன் மணந்தான். ஆனால் அவர்களுக்கு யாருக்கும் புத்திர பாக்கியம் இல்லை. இதனால் வருந்திய அவர்கள், தம் கணவரிடம் சென்று புத்திரன் இல்லாத வீடு வீடாகுமா நல்ல புத்திரர்களை பெற்று பாலூட்டி சீராட்டி வளர்க்காத பெண் ஜென்மம் வீணன்றே? நாங்கள் புத்திரர்களை பெறுவதற்கு உபாயத்தை நீங்களே கூற வேண்டும் என அங்கலாயித்தார்கள்.

அதை கேட்ட சந்திரன், முன்பு குரு பத்தினியை தீண்டியதால் ஏற்பட்ட சாபத்தால் எனக்கு புத்திர பாக்கியம் இல்லாமல் போனது. இதனை போக்க ஆதி அந்தம் இல்லாத ஈசனாலேயே முடியும். ஆகையால் நீங்கள் ஈசனை வழிபடுங்கள் என்று தெரிவித்தார். கிருத்திகை பெண்களும் பல்வேறு இடங்களில் வழிபட்டு பல யுகங்கள் தவம் செய்தனர்.

மலர்ந்த தாமரையே மலையாக மாறி லிங்காகாரமாக இருக்கும் பத்மகிரீஸ்வரரை தரசித்து மலையை வலம் வந்து ஒரு மண்டலம் இங்கு வசித்தனர். இதைப் போலவே சூரபத்மனால் துன்புறுத்தப்பட்ட தேவர்களின் முறையீட்டை செவிமடுத்த சிவபெருமான், சூரர்குலத்தை அழிக்கவல்ல ஒரு புத்திரனை தருவோம்.

அக்குழந்தைக்கு பால் கொடுக்க தகுதியுடையவர்கள் கிருத்திகை பெண்களே ஆவார்கள். அவர்களும் எம்மை நோக்கி நெல்லிவனத்தில் அமர்ந்து தவம் செய்கின்றனர். அவர்களை அழைத்து வந்து சரவணத்தில் இருக்க செய்யுங்கள் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

திருமாலும், நான்முகனும், ஏனைய தேவர்குலமும் தமக்கு எதிர்காலத்தை நோக்கியவர்களாய் கிருத்திகை பெண்களை அழைத்து வந்து சரவணத்தில் தங்க செய்தனர். இவ்வாறு கார்த்திகை பெண்கள் இங்கு வசித்தவிதம் போன்று பல்வேறு சிறப்புகளை பெற்றது பத்மகிரி மலையாகும்.

## திருக்கோயிலின் தோற்றம்

திண்டுக்கல்லின் அமைப்பு முற்காலத்தில் இருந்தே சேர, சோழ, பாண்டி நாடுகளுக்கு எல்லைக்கல் போன்று இருந்து வந்தது. அதற்கு பின் மைசூர், விஜயநகரம், கர்நாடக நவாப் சமஸ்தானங்களுக்கும் ஒரு மத்திய இடமாக அமைந்தது. இதன் காரணமாக வரலாற்றின் இடைப்பட்ட காலத்தில் திண்டுக்கல் பல தாக்குதல்களுக்கு உள்ளாகி, பல அரச வம்சத்தினர்களின் ஆட்சிக்கு அவ்வப்போது உட்பட்டதாக இருந்தது.

புராண வரலாற்றில் சேர அரசன் தர்மபாலன் ரத்னகிரி மலையில் பத்மகிரீஸ்வரருக்கும், அபிராமி அம்மனுக்கும் கோயில் கட்டினார் என்ற குறிப்பு மட்டுமே உள்ளது. விரிவான செய்திகள் எதிலும் காணப்படவில்லை.

தேவார பாடல்களில் திண்டிச்சுரம் என்று குறிப்பிடும் பகுதி திண்டுக்கல்லாக இருக்கலாம் என வ.உ. சாமிநாதய்யர் குறிப்பிட்டுள்ளார். அவருடைய கூற்றின்படி சரியாக 7ம் நூற்றாண்டில் பாடப்பட்ட தேவார பாடல் பெற்ற வைப்புத்தலமாக திண்டுக்கல் விளங்கி வந்துள்ளது.

இதற்கு பின்பு 1605ல் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரால் இங்கு கோட்டை ஒன்று கட்டப்பட்டது. அதற்கு பின்னால் இக்கோட்டை திருமலை நாயக்கராலும், சதக்சாகேப், மிர்சாகேப் ஆகியோராலும் கடைசியாக 1798ல் ஆங்கிலேயர்களாலும் அவ்வப்போது பழுது பார்க்கப்பட்டு திருத்தியமைக்கப் பட்டது.

இதற்கிடையில் 1788ல் மைசூர் அரசாட்சிக்கு உட்பட்டிருந்த திண்டுக்கல்லை பார்வையிட்ட மைசூர் மன்னர் திப்புசுல்தான் மலைக்கோட்டையில்



சுவாமி தரிசனம் என்ற பெயரால் ஒற்றர்கள் வரக்கூடும் என்ற எண்ணத்தால் மலை மீது கோயில் கொண்டிருந்த அபிராமி அம்மன், பத்மகிரிநாதர் இன்னும் மற்ற உற்சவ மூர்த்திகள், பரிவார தேவதைகள், விக்ரகங்கள் அனைத்தையும் அப்புறப்படுத்துமாறு உத்தரவிட்டார். எனவே இந்த விக்ரகங்கள் அனைத்தும் ஏற்கனவே நகரில் மத்தியில் கோயில் கொண்டிருந்த காளகஸ்தீஸ்வரர் ஞானாம்பிகை கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

மலையின் பெயர் பெற்றிருந்த பத்மகிரீஸ்வரர், அபிராமி அம்மன் நகரின் மத்தியில் வந்ததும், காளகஸ்தீஸ்வரர் கோயிலை மக்கள், அபிராமி அம்மன் கோயில் என அழைக்க துவங்கினர். அப்படி மக்கள் அழைத்த போதும் இக்கோயில் காளகஸ்தீஸ்வரர் கோயில் என்றே பதிவேடுகளில் இன்றளவும் இருந்து வருகிறது.

மலை மீது கோயில் கொண்ட அபிராமி தேவிக்கும் பத்மகிரிநாதருக்கும் நடத்தப்படும் திருவிழாவின் போது, மலை மீது கொடியேற்றி உற்சவம் துவங்கியதும், உற்சவ மூர்த்திகளை கீழே கொண்டு வரப்பட்டு நகரில் மத்தியில் அமைந்துள்ள காளகஸ்தீஸ்வரர் கோயில் மண்டபத்தில் எழுந்தருளச் செய்து உற்சவம் பூர்த்தியானதும், மறுபடியும் உற்சவ மூர்த்திகளை மலைக்கு கொண்டு சென்று விடுவது வழக்கமாக இருந்துள்ளது.

கோட்டையில் இருந்து கீழே இறக்கப்பட்ட விக்ரகங்கள் இந்த கோயிலிலேயே இன்றளவும் நீடித்து வருகிறது. மலைக்கோட்டையில், விக்ரகங்கள் இல்லாத கோயிலாகவே இருந்து வருகிறது.

திண்டுக்கல் நகரில் இந்த கோயிலில் இரண்டு மூர்த்திகளும், இரண்டு அம்மன்களும் இருந்த போதும், வழிபாடுகள், திருவிழாக்கள் அனைத்தும் அபிராமி அம்மனுக்கும், பத்மகிரீஸ்வரருக்கும் மட்டுமே நடந்து வருகிறது. ஆண்டுதோறும் இங்கு நடக்கும் சித்திரை திருவிழா மிக பிரசித்தி பெற்றதாகும்.

சித்திரைப் பெருவிழா, ஆனித் திருமஞ்சனம், ஆடி சுக்கிரவார உற்சவம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கந்த சஷ்டி கார்த்திகை பெருவிழா, பங்குனி உத்திரப் பெருவிழா போன்ற விழாக்கள் இத்திருக்கோயிலில் நடைபெறும் முக்கியமான விழாக்களாகும்.

## நித்தியபடி பூஜை

இத்திருக்கோயில் காலை திருவனந்தல் முதல் காலை சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் வரை ஐந்துகால பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இரவு அர்த்த சாமபூஜை முடிந்ததும் பள்ளியறைச் சொக்கர் உள் பிரகாரத்தில் புறப்பாடாகி பள்ளியறைக்கு எழுந்தருளுகிறார்.

இத்திருக்கோயிலில் காரணாகம முறைப்படி பூஜைகள் நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு பிரதோஷத்தன்றும், வெள்ளி ரிஷப சிறிய வாகனத்தில் ஸ்ரீ பிரதோஷ நாயகர் அம்பாளுடன் எழுந்தருளி உள்பிரகாரத்தில் வலம் வந்து சிறப்பான முறையில் செய்யப்படும் பூஜைகளை ஏற்றுக் கொள்கிறார்.

ஒவ்வொரு வளர்பிறை சஷ்டியிலும் காலையில் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யப்படுகிறது. மாலையில் உற்சவர் உள் புறப்பாடும் நடைபெற்று வருகிறது.



## சென்னையில் ஒரு குருஸ்தலம்

# திருவலிதாயம் (பாடி)




தொண்டை நாட்டில் பாடல் பெற்ற 32 சிவஸ்தலங்களில் ஒன்றானது திருவலிதாயம், என்னும் ஷேத்ரம் பாடியில் உள்ளது.

சிவப்பிரணவம், சக்தி பிரணவம் ஆகியவற்றின் சங்கமமாக உதித்த விநாயகப் பெருமான் கஜமுகாசுரனை அடக்கி பிரம்ம புத்திரிகளான கமலை, வள்ளி ஆகியோரை மணந்தருளிய திருத்தலம்.

தன் தந்தையார் பெற்ற சாபத்தால் கருங்குருவியாக பிறந்த வியாழ முனிவரின் மகன் வலியன், கருங்குருவியாய் வந்து வழிபட்டு பேருபெற்றத் திருத்தலம். அகத்தியரும் அநுமனும் வந்து பூஜித்து போற்றிய மகிமை மிக்கத் திருத்தலம். இத்தகைய புராண பெருமைகளை எல்லாம் ஒருங்கே பெற்ற திவ்வியத் திருத்தலமே, தொண்டை நாட்டு திருத்தலங்கள் 32ல் மிகவும் தொன்மையான திருத்தலமான பாடி, அருள்மிகு திருவல்லீசுவரர் திருக்கோவிலாகும். மகான்களால் போற்றப்பட்ட இத்தலம் அம்பத்தூர், ஆவடி செல்லும் வழியில் லூகாஸ் - டி.வி.எஸ். பஸ் நிலையம் அருகில் அழகிய நந்தவனத்துடனும், திருக்குளத்துடனும் தூய்மையாய் அமைந்துள்ளது.

சென்னையைச் சுற்றியுள்ள 11 சிவாலயங்களின் நடுவே திருவலிதாயம் உள்ளது. வியாழ குரு வழிபட்டு, பாபநிவர்த்தி பெற்றதன் காரணமாக குருஸ்தலம் எனப் பெயர் பெற்றது. திருஞானசம்பந்தர் அருணகிரிநாதர், வள்ளலார் இராமலிங்க சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் முதலான அருளாளர்களால் பாடப்பெற்றதும் சூரியன், சந்திரன், இந்திரன், இமயன், ஸ்ரீ மகாவிஷ்ணு, ஸ்ரீ ராமர், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ பரத்வாஜமுனிவர் ஆகியோரால் பூஜிக்கப்பட்டதுமான பாடி என்று வழங்கும் திருவலிதாயப் புண்யக்ஷேத்ரத்தில் அருள்மிகு ஜெகதாம்பாள் சமேத திருவல்லீஸ்வரர் சிறப்புறக் காட்சி தருகின்றார்.

**தல தரிசனம் :**

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இவ்வாலயம் மூன்று நிலை கோபுரங்கள் கொண்டது,. தீர்த்தம் பரத்வாஜ தீர்த்தமாகும். கோபுரத்தை ஒட்டி கிழக்கு கோபுரத்தில் வடகிழக்கு மூலையில் நவகிரக சன்னதியின் கோபுரத்தின் அருகே குருபகவானின் தனிக் கோயிலையும் காணலாம்.

கோயிலின் உள்ளே இறைவன் திருவலிதாயநாதர், திருவல்லீஸ்வரப் பெருமான் ஆகிய திருநாமங்களுடன் லிங்கஸ்வரூபமாக காட்சி தருகிறார். அன்னை தாயம்மை, ஸ்ரீஜெகதாம்பிகை எனப் பல பெயர்களில் வழங்கப்படுகிறார். சிவனை வணங்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர் போன்ற அபூர்வ சன்னதிகள் இவ்வாலயத்தில் உள்ளது.

**குருபகவானுக்கு தனி சன்னதி :** இத்திருக்கோயிலில் வியாழகுருவிற்கு தனி சன்னதி அமைக்கப்பெற்று குருபெயர்ச்சியில் குரு அருள் பெற குருபெயர்ச்சி விழா ஆண்டுதோறும் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்படுகிறது.

இந்த குருஸ்தலத்தில் திருமணத்தடை, புத்திரபாக்யம் பொருட்டு உள்ள தோஷங்கள் நீங்க குரு பரிகாரத்திற்கு 9 வாரம், 21 வாரம் நெய் தீபம் ஏற்றி கடைசி வாரம் அர்ச்சனை, அபிஷேகம் செய்து மஞ்சள் வஸ்திரம் சாத்தி குருபகவான் மகிழும்வண்ணம் செய்தால் நன்மை பயக்கும்.

மேலும் இவ்வாலயத்தின் அனைத்து விழாக்களையும் வெகு சிறப்பாக செய்து வரும் பரம்பரை அறங்காவலர், திரு. பி.எஸ். சண்முகசுந்தரம் நிர்வாக அதிகாரி திரு. வெ. சாரங்கபாணி அவர்களையும் மற்றும் சிப்பந்திகளையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

மேலும் கோயில் பற்றிய விவரங்கள் அறிய

தொலைபேசி : **2654 0706**

- வசந்தா சுரேஷ்குமார்



திருவல்லீஸ்வரர்




ஜெகதாம்பிகை



சிவனை வணங்கும் ஆஞ்சநேயர்

# விளக்கு



அருண்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

மனிதனுக்குத் துன்பஞ் செய்கின்றவை பல. அவற்றுள் இருள் ஒன்று. இருளில் கட்டையா? கள்வனா? காலில் பட்டது சந்தனமா? சாணமா? அரவமா? கயிறா? என்று அறிந்து கொள்ள முடியாது.

இருளில் ஒரு வேலையுஞ் செய்ய முடியாது: நடமாடவும் முடியாது. இரவில் நமது வீடுகளில் திடீர் என்று மின்சார விளக்குகள் அணைந்து விட்டால் அப்படியே அத்தனைபேரும் அசைவற்று நிற்க நேர்கின்றது.

விளக்கு நமக்கு எத்தனை வண்ணமாக உதவி செய்கின்றது என்பதை நாம் அது இல்லாதபோதுதான் உணர முடியும். தாய் எப்படி எப்படி நம்மை வளர்க்கின்றாள் என்பதைத் தாய் இல்லாதபோது தானே உணர முடிகின்றது.

ஒரு வீட்டில் விளக்கெரிந்தால் அந்த வீடு மங்களகரமாக இருக்கும். விளக்கின்றி இருள் சூழ்ந்த வீடு, பேய் நடமாடும் பாழ் நிலம்போல் இருக்கும்.

பொருள்களை விளக்குகின்ற விளக்குகள் நான்கு எனவுணர்க. சூரியன், சந்திரன், அக்கினி, ஓசை என்ற நான்குமாகும். பகலிலே பொருள்களை விளக்குவது கதிர்: இரவிலே பொருள்களை விளக்குவது மதியுங் கனலும்: இந்த மூன்றும் இல்லாத போது ஓசை நமக்குப் பொருள்களை விளக்கும்.

இரவிலே ஒரு காட்டில் இருளில் வழியுங் குழியுந் தெரியாது. ஒருவன் நின்று திகைக்கின்றான். அப்போது ஒரு புறத்தில் நாய் குரைத்தது. அந்த ஒலியைக் கொண்டு மக்கள் வாழவேண்டும் என்று தெரிந்து ஒலி வந்த வழியே போவான். அன்றியும் தவளைகள் கரகரவென்று கத்தின ஒலியைக் கேட்டான். அங்கு நீர்நிலையென்று அறிகின்றான். ஆகவே கதிர் மதிவிளக்கு என்ற மூன்றும் இல்லாதபோது ஓசை நமக்கு உதவுகின்றது.

வீட்டிலேயுங்கூட இருளில் அசைவற்றுத் திகைக்கின்றபோது அங்கு யாராவது பேசினால் அந்தக் குரலோசையைக் கண்டு இன்னார் என்று விளங்கிக் கொள்ளுகின்றோம் அல்லவா? எனவே சொல்லே ஒரு விளக்கு ஆகும்.

**"இல்லக விளக்கது இருள் கெடுப்பது**
**சொல்லக விளக்கது சோதியுள்ளது"**

என்கின்றார் அப்பரடிகள்.

சொல்லே விளக்காகத் தோன்றியருளிய ஒரு வரலாறும் உண்டு.

நாராயணமூர்த்தியை மனமொழி மெய்களால் வழிபட்டு மகிழ்கின்றவர்களாக விளங்கிய ஆழ்வார்கள் மூவர்கள், முதலாழ்வார்கள் எனப்படுவார்கள். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற நாமங்களை யுடையவர்கள்.

நடுநாட்டில் திருக்கோவலூர் என்ற ஒரு திருத்தலம் உண்டு. காரி முதலிய மன்னர்கள் இருந்து அரசு புரிந்த திருநகரம். அத்தலத்திலே எழுந்தருளியுள்ள திருமாலைச் சேவிக்கும் பொருட்டுப் பொய்கையாழ்வார் சென்றார். அத்திருக்கோயிலிலே நெடுநேரம் இறைவனை வணங்கிவிட்டு ஒரு சிறு இடத்தில் சென்று படுத்து உறங்கி விட்டார்.

நடு இரவு, குளிர்காலம்: சிறு தூறல்: வாடை வீசி உயிர்களை நடுக்கிக் கொண்டிருந்தது. பூதத்தாழ்வார் என்ற பெரியவர் அங்கு வந்து மெல்ல ஒதுங்கினார். படுத்திருந்த பொய்கையாழ்வார் பளிச்சென்று எழுந்து, இந்த இடம் ஒருவர் படுக்கவும், இருவர் இருக்கவும் ஆகும் என்று கூறி அவரை அருகில் இருக்கச் செய்து தானும் இருந்தார்.

சிறிது நேரத்திற்குப்பின் அங்குப் பேயாழ்வார் வந்தார். அமர்ந்திருந்த இருவரும் உடனே எழுந்து, "இங்கு ஒருவர் படுக்கலாம்: இருவர் இருக்கலாம்: மூவர் நிற்கலாம்" என்று கூறி, நின்று கொண்டார்கள்.

அச்சிறு இடத்தில் மூவரும் நெருங்கி நின்றார்கள். ஒரே அமைதி, சிறிது நேரத்திற்குப்பின் கன்னங் கரேல் என்று ஒருவர் மொழு மொழு என்ற உடம்புடன் வந்து அவர்களை நெருக்கிக் கொண்டு உட்புகுந்தார்.

அந்த இடம் மிக நெருக்கமான சிறு இடம். ஒருவர் மட்டும் படுக்கவும், இருவர் மட்டும் இருக்கவும், மூவர் மட்டுமே நிற்கவும் முடியும். இப்போது நான்காவது ஒரு பேர்வழி வந்து நுழைந்து நெருக்கத் தொடங்கினார். மூவரும் திக்குமுக்காடி விட்டார்கள். மூச்சுத் திணறியது. 'ஐயா! தங்களை யார் என்று அறிய விரும்புகின்றோம்', ஒரே அமைதி, மௌனம் நிலவியது.

விளக்கில்லாமல் எப்படி அவரை இன்னார் என்ற அறிய முடியும். உடனே பொய்கையாழ்வார் மொழி விளக்கு ஏற்றுகின்றார்.

அது சிறு விளக்கா? உலகில் உள்ள எல்லா விளக்குகட்கும் பெரிய விளக்கு. ஐந்து கண்டங்கட்கும் ஒளிதரக்கூடிய அத்துணைப் பெரிய விளக்கு.

அந்த விளக்குக்கு நெய் ஒருபடி இருபடி விட்டாற் கட்டுமா? இந்த பூமியே - அகல், கடலே - நெய், மேருகிரி - திரி, சூரியனே - விளக்கு.

**"வையந் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய சுடரே விளக்காகச் - செய்ய**
**சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
**இடராழி நீங்குகவே என்று"**

என்று பாடினார் பொய்கையாழ்வார்.

அடுத்தபடி, பூதத்தாழ்வார் உள்ளத்தில் ஒரு விளக்கு ஏற்றுவாராயினார். அதற்கு, அன்பு-அகல்: ஆர்வம்-நெய்: எண்ணம்-திரி: ஞானமே-விளக்கு.

**"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக**
**இன்புருகு சிந்தை இடுதிரியா-கன்புருகி**
**ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ்புரிந்த நான்"**

இவர்கள் இருவரும் பாடியபின் ஒரு சோதி விளக்கு தோன்றியது. அவ்வொளியில் தம்மை நெருக்கியது யார் என்று மூவரும் பார்த்தார்கள். அவர் திருவுருவம் நன்கு தெரிகின்றது. உடனே பாடுகின்றார் பேயாழ்வார்.

**திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கினர்**
**பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்**
**என்னாழி வண்ணன்பால் இன்று.**

'இறைவனை யார் கண்டவர்?' என்று சிலர் கேட்கின்றார்கள். கண்டேன் கண்டேன் என்று கூறுகின்றார் பேயாழ்வார்: ஆ!ஆ! என்ன அழகு! இதோ எங்களை நெருக்கியது எம்பெருமானே?

திருமார்பில் திகழ்கின்ற திருமகளைக் கண்டேன்: அழகிய திருமேனியைக் கண்டேன்: விளங்குகின்ற கதிரவன் ஒளி போன்ற அழகிய வடிவத்தைக் கண்டேன்: போரில் திகழ்கின்ற அழகிய சக்ராயுதத்தைக் கண்டேன்: மற்றொரு கையில் அன்புள்ள பாஞ்சஜன்யம் என்ற சங்கையுங் கண்டேன். கடல் வண்ணனாம் எம் கடவுள் பால் இன்று இத்தனையுங் கண்டேன்" என்கின்றார். எனவே இதனை மொழி விளக்கு என உணர்க.

பாரதம் பாடிய வில்லிபுத்தூராரின் திருமைந்தர் வரந்தருவார் பாடுகின்றார்.

**"பாவருந் தமிழால் பேர்பெறு பனுவற்**
**பாவலர் பாதிநா ளிரவில்**
**மூவரும் நெருக்கி மொழிவிளக் கேற்றி**
**முகுந்தனைத் தொழுதநன் னாடு**
**தேவரும் மறையும் இன்னமுங் காணாச்**
**செஞ்சடைக் கடவுளைப் பாடி**
**ஏவரும் மதித்தோர் மூவரில் இருவர்**
**பிறந்தநா டிந்தநன் னாடு"**

அகில வுலகங்களுக்கும் விளக்காக நின்று எல்லாவற்றையும் விளக்குகின்றவர் சிவபெருமான். அதனால் அவரை விளக்கென்றே கூறுகின்றார் மணிவாசகர்.

**"சோதியே சுடரே சூழொளி விளக்கே"**
**அது "தூண்டா விளக்கு"**
**"மாணிக்க மணி விளக்கு".**







உறையூர்

# அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில்

திருச்சிராப்பள்ளி

**வே**ண்டுவோர்க்கு வேண்டும் வரமருளும் உறையூர், அருள்மிகு வெக்காளியம்மன் தமிழகத்தில் உள்ள சக்தி தலங்களுள் முதன்மை பெற்ற பிரார்த்தனை தலமாக விளங்குகிறது.

இத்திருக்கோயில் திருச்சிராப்பள்ளியில் உறையூரில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் மத்தியபேருந்து நிலையத்திலிருந்தும், ஜங்ஷன் புகைவண்டி நிலையத்திலிருந்தும் சுமார் 4 கி.மீ. தொலைவில் உள்ளது. உறையூர் நாச்சியார் கோயில் பஸ் நிறுத்தத்தில் இருந்து 1.2 கி.மீ. தூரத்தில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

வெட்டவெளியில் மேல்விமானம் இல்லாத கருவறையில் வெயில், பனி, மழை, குளிரில் அன்னை வெக்காளி அம்மன் வடக்கு நோக்கி வீற்றிருக்கிறாள். நாடிவரும் பக்தர்களின் குறைகளை அன்றாடம் தீர்த்து வைக்கிறாள்.

**அம்மனின் தோற்றம்**

அக்னிச் சுவாலையுடன் கூடிய கிரீடம் அதிலே நாகம் உள்ளது. கீழே நம்மைக் கருணையுடன் நோக்கும் இருவிழிகள், கோரைப்பற்கள் இரண்டிருந்தும் சீற்றம் இல்லை. சிரித்த முகம் நான்கு கைகள் நான்கு யுகங்களையும், நான்கு திசைகளையும், நான்கு வேதங்களையும் குறிப்பதாகும்.



கைகளில் வலது மேற்கையில் உடுக்கை (டமருகம்) இது ஒலியின் மூலம் உலகத்தையே படைத்ததைக் குறிக்கும்.

இடது மேற்கையில் பாசம் உயிர்களைத் தன்வயப்படுத்தவும் உயிர்களின் ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை அழிப்பதாகும்.

வலது கீழ்க்கை திரிசூலம் பகைவரை அழிக்கும் கருவியாகவும், அம்மனே மும்மூர்த்தியையும் நியமிக்கிறார் என்பதையும் குறிக்கும். திரிபுரமான அறிவையும் குறிக்கும். இடது கீழ்க்கை கபாலம். யுகயுகாந்திரங்களாக வாழ்ந்து மறைந்த பிரம்மன் முதலியவர்களின் கபாலங்களையும் எரியக் கண்டவள் இவள்.

வலது கால் மடிந்து இடது காலை ஊன்றியதும் சுகாசனம் ஆகும். இதற்கு அம்மனால் அனைவர்க்கும் சுகமே என்பது அர்த்தமாகும்.

இவள் போர்க்கோலம் கொண்டு சுகாசனத்தில் இருந்தாலும் அசுரத்தனம்வளராமல் இவள் பாதத்திலேயே உள்ளது என்பதை அசுரன் இடது காலில் இருப்பதைக் காட்டும்.

காளி என்ற சொல்லிற்கு கரிய நிறம் உடையவள் என்பது பொருளாகும், அது இருளில் வலிமை கொண்ட அசுரனை அழிக்கும் போதுள்ள நிறமாகும். மங்கலம் தரும் அமைதி நேரத்தில் அவள் சிவப்புநிறம் உடையவள் ஆவாள்.




உதிக்கும் உதயசூரியன் நிறமும், மாலைக் கதிரின் நிறம்தான். அம்மனின் நிறமாகும்.

**திருத் தலவரலாறு**

ஊர் எனப்படுவது உறையூர் என்னும் சிறப்பு பெற்றதும் பண்டைய சோழர்களின் தலைநகராக விளங்கியதும் இவ்வுரையூர் நகரமாகும்.

திருநிறைந்த உறையூரை பராந்தக சோழன் ஆண்டு வந்தான். சாரமாமுனிவர் என்ற பெரியவர் நந்தவனம் அமைத்து இவ்வுலகில் கிடைக்காத சில அரிய மலர்களை செவ்வந்திப் பூக்களை நாகலோகத்தில் இருந்து எடுத்து வந்து பயிரிட்டு நாள்தோறும் தாயுமான இறைவனுக்கு பூஜித்து வந்தார்.

தாயுமான இறைவனுக்காக அமைக்கப்பட்ட நந்தவனத்தில் மன்னனின் கட்டளையால் பூ வணிகன் ஒருவன் தினமும் செவ்வந்தி மலர்களை அபகரித்து வந்தான்.

தினமும் மலர்கள் குறைவதைக் கண்ட சாரமாமுனிவர் அதற்குரிய காரணத்தை அறிந்து மன்னரிடம் முறையிடுகிறார்.


ஆனால் மன்னனோ இறைவனுக்குரிய மலர்களை தான் அபகரிப்பது பாவம் என்று எண்ணாமல் ஆணவமாக, மன்னவனும் மகாதேவன் வடிவம்தானே? மீதமிருக்கும் மலர்களைக் கொண்டு இறைவழிபாட்டை நடத்தலாமே என்று வாதிட்டான், தன் குற்றத்தை மறைக்க முனிவரையும் அவர் போற்றித் தொழும் இறைவனையும் கடுமையாக விமர்சிக்க முற்பட்டான்.

இனி மன்னனிடம் பேசி, நீதியை நிலைநாட்ட முடியாது என்று கருதிய சாரமாமுனிவர் தாயுமானவர் சன்னதியில் வந்து மனம் வருந்தி பிரார்த்தனை செய்கிறார்.

தனக்கு ஏற்படும் அவமானத்தை இறைவன் பொறுத்துக் கொள்வார். ஆனால் அடியவர் ஒருவர்க்கு ஏற்படும் அவமானத்தை பொறுத்தருளமாட்டார்.


தாயுமானவர் கடுங்கோபம் கொண்டு உறையூரை நோக்கி மேற்கு முகமாகத் திரும்பினார். தாயுமான இறைவன் திருக்கண்களிலிருந்து தீப்பொறிகள் கிளம்பின. உறையூரில் மண்மாரி பெய்தது. மண்மாரியைக் கண்டு மக்கள் உறையூரைவிட்டு ஓடினர். மாடமாளிகை, கோபுரங்கள் எல்லாம் புதையுண்டன.

மக்கள் எல்லோரும் உறையூரின் எல்லையில் வீற்றிருக்கும் அன்னை வெக்காளியிடம் காப்பாற்றும்படி வேண்டினர். அன்னை வெக்காளியும் தாயுமான இறைவனிடம் கருணை முகமாக தோன்றினாள். மக்களை காக்கும் வெக்காளி அம்மனின் உளக் குறிப்பை இறைவன் உணர்ந்தார். மண்மாரி நின்றது. மகாதேவன் சினமும் தீர்ந்தது.



மண்மாரி பெய்து கொண்டிருக்கும்போது பராந்தக சோழன், பூர்ண கற்பவதியான தன் மனைவி புவனமாதேவியுடன் குதிரை மீதேறி காவிரிக் கரையில் செல்லும்போது கீழே விழுந்து மன்னவன் இறக்கிறான்.

அரசி புவனமாதேவி காவிரி வெள்ளத்தில் வீழ்ந்து உத்தமர்சீலி என்ற இடத்தை அடைந்து ஒரு நல்ல நாளில் நன்மகனான



அடியார் குறைகளை அறியாதவளா அம்பாள்? தன் எதிரே சீட்டு எழுதிக் கட்டப்படும் நியாயமான வேண்டுகோள்களை நிறைவேற்றித் தருகிறாள். தங்கள் பிரார்த்தனை நிறைவேறியதும் அடியார்கள் தங்கள் காணிக்கையைச் செலுத்துகின்றனர். நாளும் பெருகும் பக்தர்கள் கூட்டமும் பிரார்த்தனைச் சீட்டுகளை எழுதிக் கட்டிச் செல்கின்றனர் என்பதும் அம்பாளின் அருள் வெளிப்பாட்டை சிறப்புற உணர்த்துகின்றன.

**விடாமல் நடைபெறும் சண்டிவேள்வி - மகா அபிஷேகம்**

இத்திருக்கோயிலில் ஆவணி மாதத்தில் ஸ்ரீ சதசண்டிவேள்வி 4 நாட்களுக்கு நடைபெற்று வருகிறது. கடந்த செப்டம்பர் மாதம் 4-ஆம் தேதி முதல் 7-ஆம் தேதி வரை 4 நாட்கள் 33-ஆம் ஆண்டாக சதசண்டிவேள்வி நடந்தது.

கடைசி நாளன்று அம்பாளுக்கு 36 வகை திரவியங்களால் தொடர்ந்தாற்போல் பல மணி நேரம் மகா அபிஷேகம் நடைபெற்று வருகிறது. சதசண்டிவேள்வி உபயதாரர்களை கொண்டே நடத்தப்படுகிறது.

இது தவிர பங்குனி மாதம் தொடங்கி சித்திரை மாதம் 1-ஆம் நாள் தேர் திருவிழாவுடன் 10 நாட்கள் திருவிழாவும், வைகாசி கடைசி வெள்ளி மாம்பழ அபிஷேகமும், ஆனி மூன்றாம் வெள்ளி காய்கனி அலங்காரமும், ஆடி மற்றும் தை வெள்ளிக்கிழமைகளும், பங்குனி முதல் வெள்ளி பூச்சொரிதல் விழாவும் மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளிக்கும் வெக்காளி அம்மனை வேண்டி, வேண்டியவற்றைப் பெறுவோமே.

கரிகால் சோழனை ஈன்றெடுக்கிறாள். அன்னையின் கருணையால் சோழ பரம்பரையும் வளர்ந்தது.

மண்மாரியை தடுத்து அருள்புரிந்த அன்னை வெக்காளி அனைத்து மக்களுக்கும் இல்லம் அமையும் வரை, வானமே கூரையாக, மழை, வெயில், குளிர், பனி அனைத்தையும் தான் ஏற்று மக்களைக் காத்திட உறுதி பூண்டார். அன்னையின் கருணைக்கு ஈடு இணையேது? உறையூரில் மண்மாரி ஏற்பட்டதை புராண இதிகாசங்களும், அகழ்வாராய்ச்சியிலும் சான்றுகள் உள்ளன. மேலும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள உறையூரில் நெடுங்கிள்ளியின் மகனான பெருநற்கிள்ளி என்பவனால் கட்டப்பட்ட பத்தினிக்கோட்டமே இத்திருக்கோயில் என்பதில் ஐயமில்லை.

**பூஜை நேரம்**

இத்திருக்கோயில் தினமும் காலை 5.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை தொடர்ந்து திறந்திருக்கும். தினமும் காலை 5.30 மணிக்கும், பகல் 12.00 மணிக்கும் உபயதாரர் அபிஷேகமும் நடைபெறும். மாலை 6.00 மணிக்கு சந்தனகாப்பு அலங்காரமும் நடைபெறுகிறது.

கட்டணம் செலுத்தினால் வெள்ளிக் கிழமைகளில் காலை 10.15 மணி முதல் 11.30 மணி வரை தங்ககவச வழிபாடு உண்டு.

மாதந்தோறும் பௌர்ணமி நாட்களில் மாலை சிறப்பு அபிஷேக வழிபாடு ஆகம நூல்களில் கூறியவாறு நடைபெறுகின்றன.

**பிரார்த்தனைச் சீட்டு**

இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் திருக்கோயிலில் ரூ. 10.-க்கு வழங்கப்படும் பிரார்த்தனைச் சீட்டை வாங்கித் தங்கள் வேண்டுகோளை எழுதி அம்பாள் திருவடிகளில் வைத்து அம்பாளுக்கு எதிரே உள்ள சூலங்களில் கட்டுகின்றனர்.



டாக்டர் **சரசுவதி இராமநாதன்**

# வேலும் மயிலும் துணை

## கந்தர் அனுபூதி

- சென்ற இதழ் தொடர்ச்சி...

திருக்குறளில் சிறப்பிக்கப் பெறுவது அடக்கமுடைமை. நமக்கு வராது அதுதான். புகழினை நோக்கி நீங்கள் போய்க் கொண்டிருந்தால் அது போய்க் கொண்டிருக்கும். ஆராயப்படாத புகழ்தான் நல்ல புகழ். பிறருக்குத் தீமை இல்லாத அறம் நல்ல அறம். உடம்பில் அடக்கம் வேணும். நாலுகால் ஒரு தலை உள்ள ஆமை எப்படித் தீமை வந்தால் தன் ஓட்டுக்குள் உடலை அடக்கிக் கொள்கிறதோ அதேபோல் நாம் ஐம்புலன்களையும் அடக்கி ஆண்டால் பெருமை.

இது உடம்பு அடக்கம்! மன அடக்கத்திற்குக் கோபம் வராமலிருக்க வேண்டும். படிக்க வேண்டியதைப் படித்தால் தர்ம தேவதை உன்னை நோக்கி காத்து நிற்கும். நாக்கு அடக்கத்திற்கு மூன்று பாட்டுப் பாடினார் வள்ளுவர். வாழ்வதும் வீழ்வதும் வாயால்தான்.



இன்றைக்கு நமக்கு விரோதி என்றால் நேற்று வரை நண்பன் என்றுதான் பொருள். வருகிற விரோதம் துன்பம், கவலை எல்லாம் நம் பேச்சினால் தான் வருகிறது. பின்னர் இப்படி பேசியிருக்கக் கூடாது என்று உணர்கிறோம். இந்த பேச்சால்தான் இத்தனையும் வருகிறது.

"யாகாவாராயினும் நாகாக்க" "தீயினால் சுட்ட புண் உள்ளாறும்: ஆறாதே நாவினால் சுட்ட வடு" "ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின் நன்றாகாதாகிவிடும்" இவை தமிழ்மறை கூறுவன. வாழ்க்கையிலேயே ஒரு தீய வார்த்தை பேசினால் நீ செய்த அத்தனை புண்ணியமும், பயனும் போய் விடும் என்று பரிமேலழகர் கூறியுள்ளார்.

இந்த உலகத்தில் உள்ள மயக்கங்களில் ஈடுபடுவதில்லை என்று சத்தியம் பண்ணிக் கொள்ள வேண்டும். நான் மனிதரைப் பாட மாட்டேன் என்று ஆழ்வார் கூறினார். புனிதவாய் கொண்டு மானிடம் பாட மாட்டேன் என்றது சரியே! எது சத்தியமோ அதைப் பிடித்துக் கொண்டோமேயானால் அசத்தியம் பேச மாட்டோம். கொடுத்த கல்வியெல்லாம் அவன் கொடுத்தது. வேலவர் கொடுத்தது என்கிறார் அருணகிரி. சாப்பிடுவது மூன்று வகை ருசிக்காகச் சாப்பிடுபவன் ரோகி. பசிக்காகச் சாப்பிடுபவன் போகி. தேவைக்காக சாப்பிடுபவன் யோகி. செவிக்கு உணவில்லாத போது சிறிது வயிற்றிற்கும் ஈயப்படும். வயிற்றுக்குச் சிறிது போட வேண்டும். முருகப்பெருமானை பாடுவதற்காகவே தமக்கு கல்வி அறிவு கொடுத்தாகக் கூறுகிறார் அருணகிரிநாதர். அதுபோல் அறிவும் அவனைப் பாடுவதற்கே என்றிருந்தார்.

**"யாமோ தியகல் வியும்எம் மறிவும்**
**தாமே பெறவே லவர்தந் ததனால்**
**பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்**
**நாமேல் நடவீர் நடவீர் இனியே"**

நம்மையும் நாமேல் நடவீர் என்று

அறிவுறுத்தினார். நா அடக்கம், மன அடக்கம், புலனடக்கம், எல்லாமே ஒருவனை உயர்த்தும். பிற தெய்வங்கள் "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் என்பார் குமரகுருபரர். முருகன் உதித்ததும் இல்லை மறைந்ததும் இல்லை. கொஞ்சம்கூட மாசில்லாதவன். எந்தப் படிப்பு அறிவாலும் அறிய முடியாதவன் அவனை அறியும் அறிவுதான் தேவை. பணத்தை வைத்து ஆண்டவனைப் பிடிக்க முடியுமா? ஆண்டவனைப் பிடிக்க வேண்டுமானால் அன்பாலும் பக்தியாலும்தான் பிடிக்க முடியும். செல்வத்தாலும், சாதாரண வறட்டு அறிவாலும் ஆண்டவனை அறிய முடியாது. எல்லாவற்றிலும் மேம்பட்டவனே, பயமற்றவனே, அமராவதி காவலனே என்று எல்லாம் வாயார அழைக்கிறார். அவன் மாலயன் அறியமுடியாத மதிமுடி அமலனின் புதல்வன் அவன் அதிகன்: அனகன்: அமலன்.

**"வடிவும் தனமும் மனமும் குணமும்**
**குடியும் குலமும் குடிபோ கியவா!**
**அடியந் தமிலா அயில்வே லரசே!**
**மிடிஎன் றொருபா விவெளிப் படினே!"**

வடிவும், தனமும் , குணமும், குடியும் எல்லாமே அழியச் செய்வது வறுமை. தரித்திரம் வந்தாலே உடம்பு அழகு போய் விடும். எல்லாம் போய்விடும். தரித்திரம் வரும்போது எவன் உடன் இருக்கிறானோ அவன்தான் உண்மையான நண்பன். குடிப்பிறப்பை அழிக்கும். விழுப்பம் கொல்லும்: பிடித்த கல்விப் பெரும்புணை விடும். நாணணிகளையும்: மாண் எழில் சிதைக்கும்: தரித்திரம் வந்தால் தூங்க முடியாது. நெருப்பினுள் கூடத் தூங்கலாம். ஆனால் தரித்திரம் வந்தால் தூக்கம் ஏறாது. தரித்திரன் சொல்கிற பேச்சு அம்பலம் ஏறாது. கேட்பதற்கும் யாரும் வாரார். மனைவி மக்களோடு இன்னொருத்தவன் வாசலில் கொண்டு நிறுத்தும். முதலும் முடிவுமில்லாத முருகப் பெருமானே. அரசனே உன்னிடம் வந்துள்ளேன். தரித்திரம் என்னும் பாவி வந்தால் அரசனே நீ தான் காப்பாற்ற வேண்டும் என்று பிரார்த்தனை செய்து இந்த அனுபூதி பயில்வோருக்கு தரித்திரம் என்பதே இருக்காது.

அநுபூதியைப் பெறுவதற்கு முன் அருணகிரிநாதர் உழன்ற சூழ்நிலைகளைச் சொல்கிறார். அவர் சொல்லவில்லை. முருகப்பெருமான் சொல்கிறார். இனி அடுத்த பாடலின் கருத்தைக் காண்போம். அப்பா! என்னையும் ஒரு பொருட்டா எண்ணி வந்து உபதேசம் செய்தாயே. அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன் உரிதாகிட, உபதேசம் உணர்த்தியவா! இந்த உலகத்தில் உள்ள எல்லா பொருள்களிலும் அருமையான பொருள்களிலும் அருமையான பொருள் எது? மதிப்புள்ள மனிதன்தான் அருமையான பண்டம். இப்போது உள்ள மனிதனுக்கெல்லாம் விலையுண்டு. அதனால் தான் ஆளை விலை கொடுத்து வாங்குகிறான் என்கிறோம். ஆனால் மதிப்பில்லை. மதிப்பேயில்லாத பண்டத்திற்கு விலையே கிடையாது.

காசு கொடுத்து வாங்க முடியாதவன் ஒருவனே! அவனே மெய்ப்பொருள். பொய்யாய் இருக்கிற இந்த உலகத்தில் எந்தப் பொருள் கொடுத்தும் எந்தப் பொருளும் பெறலாம். ஆனால் அவ்வாறு மாற்றப்படாத பொருள்தான் மெய்ப்பொருள். கிடைக்காத பொருளுக்கு அரிதாகிய அருமையான மெய்ப்பொருள் என்று பெயர். கண்ணால் பார்த்துப் பெறுகிற சுகம், காதால் கேட்டுப் பெறுகிற சுகம், எல்லாவற்றையும் விட்டுவிட்டு எல்லாவற்றையும் விட உயர்ந்த சுகம், இந்த உலகத்தில் இருந்து கழன்று செல்வதுதான். அதுதான் பெரிய சுகம். அதுதான் அருமையானது.

ஊரில் உள்ளவர்கள் எல்லாம் மாணிக்கவாசகரை பார்த்து சிவப்பைத்தியம் என்று சொல்ல வேண்டுமென்றும், அதேபோல் சிவப்பைத்தியமாக அலைந்து உலகத்தை விட்டு உலகப் பற்று பந்தங்களின்று கழல வேண்டும் என்பதும் மாணிக்கவாசகரின் அவா. அதாவது தன் உடம்பைத் தானே வருத்தி வாட்டிக்கொள்ள வேண்டும். அதைப் பார்த்து மற்றவர்கள் "இவர் தன் உடம்பை இப்படி வருத்திக் கொள்கிறாரே" என்று நினைக்க வேண்டும் என்று மாணிக்கவாசகர் நினைத்தார். ஆனால் அருணகிரிநாதர் "என் உடம்பை நான் வருத்திக் கொள்ளவில்லை" ஆனால் நீயே என்னைத் தேடி வந்து கொடுத்தாய்.

நீ மட்டும் தராதரம் பார்த்து கொடுத்திருந்தால் எனக்குக் கொடுத்திருக்கக் கூடாது. "நீ கருணையினால் எனக்கு உபதேசம் உணர்த்தினாய்" என்று சொல்கிறார். கடவுள் மதிமயங்கி மாணிக்கவாசகருக்கும் அபிராமி பட்டருக்கும் அருள் வழங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. "எங்கேயோ கிடந்த எனக்கு நீ ஏற்றம் தந்து விட்டாய்" என்று இருவரும் சொல்கிறார்கள். அதுபோல் அருணகிரியும் பேசுகிறார். விக்ரமனே! அழகில் சிறந்த செவ்வேளே! அமராவதியைக் காத்தவனே.

**"அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்**
**உரிதா உபதேசம் உணர்த் தியவா**
**விரிதா ரணவிக் ரமவேள் இமையோர்**
**புரிதா ரகநாத புரந் தரனே!"**

- தொடரும்

# அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்

## ஆலங்குடி.



**அறிமுகம்**

வற்றாத நீரும் வளம் கொழிக்கும் காவிரியும் முற்றாத வாழை முகம் பார்க்கும் கொள்ளிடமும், வெண்ணாற்றிடை உயர்ந்த வீர தமிழ் சுவையும் கண்ணார காண்கின்ற கன்னி தமிழகமாம் சோழ வளநாட்டில், திருவாரூர் மாவட்டத்தில், வலங்கைமான் வட்டத்தில், ஆலங்குடி என்னும் ஊரில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. சோழ வள நாட்டில் உள்ள தேவார பாடல் பெற்ற 274 தலங்களில் காவிரிக்கு தென் கரையில் உள்ள 127 தலங்களில் 98 வது தலமாக விளங்குகிறது இத்திருத்தலம். திருவாரூர் மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற குருபரிகாரஸ்தலமாகிய ஆலங்குடி மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பெருமைகளையும் கொண்டது.

**இருப்பிடம்**

திருவாரூர் மாவட்டத்தில், வலங்கைமான் வட்டத்தில், நீடாமங்கலம் இரயில் நிலையத்திற்கு வடக்கே ஏழு கிலோமீட்டர் தொலைவிலும். கும்பகோணம் மன்னார்குடி (நீடாமங்கலம் வழி) பேருந்து மார்க்கத்தில் கும்பகோணத்தில் இருந்து தெற்கே 17 கிலோ மீட்டர் தொலைவிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

**தல வரலாறு**

இத்திருத்தலம் காவிரி நதியின் கிளை நதியான வெட்டாறு கரையிலிருந்து 1 காத தூரத்தில் அமைந்துள்ளது. பார்க்கடல் கடைந்த போது உண்டான ஆலகால விஷத்தை உண்டு தேவர்களை ஆபத்திலிருந்து காத்து இரட்சித்தமையால் ஆபத்சகாயர் என்ற பெயர் இறைவனுக்கு ஏற்பட்டது. இவ்வூருக்கு ஆலங்குடி என்ற பெயரும் ஏற்பட்டது. அசுரர்களால் தேவருக்கு நேர்ந்த இடுக்கண்களை களைந்து காத்தமையால் இத்தல விநாயகருக்கு கலங்காமற் காத்த விநாயகர் என பெயர் உண்டாயிற்று. அம்மையார் தவம் செய்து இறைவனை திருமணம் செய்து கொண்ட சிறப்பை உடையது. அம்மை திருமணம் நடந்த இடத்திற்கு இன்று திருமண மங்கலம் எனப் பெயர் வழங்கப்பெறுகிறது. மத்தியார்சுனம் ஆகிய திருவிடைமருதூர் மகாலிங்கப்பெருமானுக்கு பரிவாரத்தலமாக விளங்குகிறது. பஞ்ச ஆரண்ய தலங்களில் நான்காவதாக சாயரட்சைக்கு உகந்த திருத்தலமாக விளங்குகிறது. முசுகுந்த சக்கரவர்த்தியின் அமைச்சர் சிவ பக்தரான அமுதோகர் என்பவரால் நிர்மாணிக்கப்பட்டதாகும் இத்திருக்கோயில். அமைச்சர் செய்த சிவ புண்ணியத்தில் பாதியேனும் மன்னருக்கு தத்தம் செய்து தரும்படி கேட்க மறுத்த அமைச்சருக்கு சிரச்சேதம் ஏற்பட்டது. இதன் விளைவால் அரசனுக்கு தோஷங்கள் ஏற்பட இத்தல மூர்த்தியை வணங்கி வழிபட்டு தோஷ நிவர்த்தி செய்ததாக வரலாறு கூறுகிறது.

**தல மூர்த்திகள்**

அருள்மிகு கலங்காமற் காத்த விநாயகர், அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர், காசி ஆரண்யேஸ்வரர், அருள்மிகு ஏலவார்குழலி அம்மை, உமையம்மை, அருள்மிகு குரு தெட்சிணாமூர்த்தி.

**தலச்சிறப்பு**

திருஇரும்பூளை மற்றும் ஆலங்குடி என்ற பெயர்களால் விளங்கப்பெறுவது. திருஞானசம்பந்த பெருந்தகையால் எழிலார் இரும்பூளை என அருளப்பெற்றது. பார்க்கடல் கடைந்த போது உண்டான ஆலகால விஷத்தை உண்டு தேவர்களை ஆபத்திலிருந்து காத்து

இரட்சித்தமையால் ஆபத்சகாயர் என்ற பெயர் இறைவனுக்கு ஏற்பட்டது. இவ்வூரில் விஷத்தால் எவருக்கும் யாதொரு தீங்கும் ஏற்பட்டதில்லை. இது இன்றளவும் நடைபெற்று வரும் கண்கூடான உண்மையாகும்.

நவக்கிரகங்களில் உள்ள குருபகவானுக்கு பரிகார ஸ்தலமாகும்.

**தல விருட்சம்**

பூளைச்செடி.

**காலம்**

இத்தலத்து இறைவன் (சிவன்) சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். எனவே இத்திருக்கோயிலின் காலத்தை நிர்ணயிக்க இயலவில்லை. ஞானசம்பந்தரின் காலம் கி.பி. ஆறு, ஏழு நூற்றாண்டாகும். எனவே அதற்கு முன்னரே இவ்வாலயம் இருந்ததாக கருத்தில் கொள்ளலாம்.

**வழிபட்டோர்**

விஸ்வாமித்திரர், அஷ்டதிக்பாலகர்கள், அகஸ்தியர், புலஸ்தியர், காகபுஜண்டர், சுகர்பிரம்ம மகரிஷி மற்றும் ஆதிசங்கரர் ஆகியோர் பூஜித்த திருத்தலம் ஆகும். அம்மையின் திருமணத்திற்கு வந்த திருமால், பிரம்மா, இலக்குமி, கருடன், ஐயனார், வீரபத்திரர் முதலானோர் தம் தம் பெயரால் லிங்கங்கள் நிறுவி பூஜித்து வழிபட்ட தலம். முசுகுந்த சக்கரவர்த்தி, சுவாசனன் மற்றும் சுந்தரர் வழிபட்ட தலமாகும். திருஞானசம்பந்தரால் பதிகம் பெற்றது. அப்பர் அடிகளால் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் சேர்த்துப் பாடல் பெற்ற சிறப்புடையது. திருஞானசம்பந்தர் தமது பாடல்களால் இத்தலத்தை சிறப்பித்து இரண்டாம் திருமுறையில் பாடியுள்ளார்.

**தீர்த்தங்கள்**

இத்திருத்தலத்தை சுற்றி 15 தீர்த்தங்கள் உள்ளன. முக்கியமாக திருக்கோயிலை சுற்றி அகழியாக அமைந்துள்ள அமிழ்த புஷ்கரணி எனும் தீர்த்தம் மிகவும் சிறப்புடையதாகும்.

பிரம்ம தீர்த்தம், இலக்குமி தீர்த்தம், இந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம், யம தீர்த்தம், நிருதி தீர்த்தம், வருண தீர்த்தம், வாயு தீர்த்தம், குபேர தீர்த்தம், ஈசான தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அமிழ்த புஷ்கரணி, ஞான கூபம் கிணறு, பூளை வள ஆறு ஆகிய 15 தீர்த்தங்கள் உள்ளன.

**வழிபாடும் வழிபடும் முறைகளும்**

இத்திருக்கோயிலுக்கு 14 தலைமுறைகள் புண்ணிய பேறு பெற்றவர்களே வருகை தர இயலும். முதலில் கலங்காமற் காத்த விநாயகரை வணங்கி பின்னர் கொடி மரம் சென்று அங்குள்ள துவஜ கணபதியை வணங்கி நேராக சென்று சுவாமியை (ஆபத்சகாயேஸ்வரர்) தரிசித்து பின்னர் குரு தெட்சிணாமூர்த்தியை வணங்கி சங்கல்பம் செய்து அர்ச்சனை முதலியவைகளை முடித்து பிரகாரத்தில் உள்ள சோமாஸ்கந்தர், முருகன், மகாலெட்சுமி, துர்க்கை, சண்டிகேஸ்வரர், நவக்கிரகங்கள், உற்சவர் குருமூர்த்தி முறையே வழிபட்டு. ஏலவார் குழலி அம்மை மற்றும் சனிபகவானை தொழுது கொடிமரத்தில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வித்தல் வேண்டும். பின்னர் குருபரிகாரமாகிய இருபத்து நான்கு நெய் தீபங்களை தீபம் ஏற்றும் இடத்தில் ஏற்றி திருக்கோயிலை மூன்று முறை வலம் வந்து ஒவ்வொரு முறையும் கொடி மரத்தின் கீழ் வீழ்ந்து நமஸ்காரம் செய்து பரிகாரத்தை நிறைவு செய்தல் வேண்டும்.

**தினசரி நான்கு கால பூஜைகள் நடைபெறுகிறது.**

1. காலசந்தி காலை 8.00 மணி முதல் 8.30 மணி வரை

2. உச்சிக்காலம் மதியம் 12.30 மணி முதல் 1.00 மணி வரை

3. சாயரட்சை மாலை 5.30 மணி முதல் 6.00 மணி வரை

4. அர்த்தசாமம் இரவு 8.30 மணி முதல் 9.00 மணி வரை

இத்திருக்கோயிலில் தினசரி அருள்மிகு குருபகவானுக்கு கீழ்கண்ட விவரப்படி மூலவருக்கும் உற்சவருக்கும் அபிஷேகம் நடைபெறுகிறது. மூலவருக்கு அபிஷேக கட்டணம் ரூ. 750.00 (ரூபாய் எழுநூற்று ஐம்பது மட்டும்), உற்சவருக்கு அபிஷேக கட்டணம் ரூ. 300.00 (ரூபாய் மூன்று நூறு மட்டும்) செலுத்தி பக்தர்கள் அபிஷேகம் செய்து குருவருள் பெற வேண்டுகிறோம்.

**விவரம்**

அருள்மிகு மூலவர் குரு அபிஷேகம் தினசரி
அதிகாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை

அருள்மிகு உற்சவர் குரு அபிஷேகம்
காலை 8.00 மணி முதல் 8.30 மணி வரை
பகல் 12.00 மணி முதல் 12.30 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை


மூலவர் குருமூர்த்திக்கு அதிகாலையில் மட்டுமே அபிஷேகம் நடைபெறும் மற்ற நேரங்களில் உற்சவர் குருமூர்த்திக்கு அபிஷேகம் நடைபெறும்.

அபிஷேகத்தில் கலந்து கொள்பவர்களுக்கு அருள்மிகு குருபகவான் உருவம் பதித்த இரண்டு கிராம் வெள்ளியிலான டாலர் பிரசாதமாக வழங்கப்படும்.

சகஸ்ரநாம அர்ச்சனை செய்பவர்களுக்கும் அருள்மிகு குருபகவான் உருவம் பதித்த இரண்டு கிராம் வெள்ளியிலான டாலர் பிரசாதமாக வழங்கப்படும்.



# சைவமும் தமிழும்



சிவனை அருந்தவத்தோன் என்றும், ஆதிரை நாளில் பிறந்தவன் என்றும் தொகை நூல்கள் குறிக்கின்றன. சிவன் தலையில் கங்கை தங்கியிருத்தல், அவன் கழுத்தில் நீல நிறம் இடம் பெற்றிருத்தல் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. சிவனுக்கு உரிய ஆயுதம், ஊர்தி, கொடி முதலியன பற்றியும் செய்திகள் உள்ளன. சிவன் திருமுடியில் பிறை சூடியிருப்பதும், அவன் புலித்தோல் ஆடை அணிந்திருப்பதும், கையில் மழுப்படை ஏந்தியிருப்பதும், சிவன் முப்புரம் எரித்ததும் முதலாய பல அரிய செய்திகளைச் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. பிற்காலத்தே சைவத் தமிழ் இலக்கியங்கள் பலவும் தோன்றுவதற்கு இத்தகு குறிப்புகள் உந்துதலாக இருந்திருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது.

**சங்க நூல்களில் உமை**

பத்துப்பாட்டின், கடவுள் வாழ்த்தாகக் கருதத்தக்கது திருமுருகாற்றுப்படை. இந்நூலில், உமையை ஆசிரியர் பல்வேறு பெயர்களில் அடையாளப்படுத்தியுள்ளார். முருகனை உமையவள் மகன் என்று குறித்துக்காட்டும் நக்கீரர்.

**மால்வரை**
**"மலைமகள் மகனே: மாற்றோர் கூற்றே:**
**வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ:**
**இழையணி சிறப்பின் பழையோள் குழவி"**

எனவரும் தொடர்களில் உமையை மலைமகள், கொற்றவை, பழையோள் என்ற பெயர்களால் குறித்துச் சென்றுள்ளார். கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில் உமை, கொடிபுரை நுசுப்பினாள்: வண்டரற்றும் கூந்தலாள்: முலையணிந்த முறுவலாள் என வருணிக்கப்பட்டுள்ளாள்,

**உமை இலக்கணம்**


பரிபாடல்களில் எழுபது பாடல்கள் தொகுக்கப்பட்டதாகவும், தற்போது இருபத்திரண்டு பாடல்கள் மட்டுமே எஞ்சியிருப்பதாகவும் குறித்துள்ளனர். இதில் காடுகிழாள் எனக் குறிக்கப்படும் உமைக்கு ஒரு இசைப்பாடல் இருந்ததாகவும், அப்பாடல் இன்று கிடைக்கப்பெறவில்லை என்றும் தெரிகிறது. பெண் உரு ஒரு திறம் ஆகின்ற என்ற புறநானூற்றுக் கடவுள் வாழ்த்தில், உமை, சிவனின் இடப்பாகத்தில் இருத்தல் குறிக்கப்பட்டுள்ளது. ஊர்ந்தது ஏறே: சேர்ந்தோள் உமையே என்று அகநானூற்றுக் கடவுள் வாழ்த்தில் ஒரு தொடர் வருகிறது. சிவனோடு இணைந்து உலகத்தைக் காப்பவள் உமையே என்பதை கலித்தொகைக் கடவுள் வாழ்த்து.

**"பாணியும் தூக்கும் சீரும் என்றிவை**
**மாணிழை அரிவை காப்ப**
**வாணமில் பொருள் எமக்கு அமர்ந்தனை ஆடி"**

எனக் கூறி நிறைவிக்கிறது.

**சங்க நூல்களில் முருகன்**

கடைச்சங்க இலக்கியங்களுள் முருகன் பற்றிய குறிப்புகளே அதிகமாகக் காணப்படுகின்றன. திருமுருகாற்றுப்படை தரும் முருகன் பற்றிய செய்திகள், சங்க காலத்தில் சிறந்திருந்த முருக வழிபாட்டிற்குச் சான்று கூறி நிற்கின்றன. திருமுருகாற்றுப்படை முருகன் எழுந்தருளியிருந்த இடங்களை அறுபடை வீடு என்று குறித்துக் காட்டுகிறது. அவை,



செந்தமிழ் வாரிதி.
முனைவர் **இரா. செல்வக்கணபதி**

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), ஏரகம் (சுவாமிமலை), குன்றுதோராடல் (பலமலைத் தலங்கள்), பழமுதிர்ச்சோலை என்பன. திருமுருகாற்றுப்படை 317 வரிகளைக் கொண்டுள்ளது. இந்நூலின் நிறைவில் முருகனை வாழ்த்தும் நோக்கில் அமைந்த பத்து அழகிய வெண்பாக்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றைத் தமிழில் எழுந்த முருகன் பற்றிய முதல் துதிப் பாடல்கள் என்று கருதலாம். முருகன் அருளும் திறத்தை.

**"அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்**
**வெஞ்சமலரில் அஞ்சல்என வேல்தோன்றும் - நெஞ்சில்**
**ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்**
**முருகா என்று ஓதுவார் முன்**

என்ற பாடலும், முருக அடியார்களின் உறுதிமிக்க - பத்திமைச் சிறப்பை.

**"உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்**
**பின்னை ஒருவரை யான்பின் செல்லேன் - பன்னிருகைக்**
**கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்**
**வேலப்பா செந்தி வாழ்வே"**

என்ற பாடலும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

**பரிபாடலில் முருகன்**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலில் முருகன் குறித்துப் பாடப்பெற்ற அழகிய, நீண்ட எட்டு இசைப்பாடல்களைக் கடுவன் இளவெயினனார், ஆரியன் நல்லந்துவனார், குன்றம்பூதனார், நல்லழிசியார், நப்பண்ணனார், நல்லச்சுதனார் ஆகியோர் பாடியுள்ளனர். இப்பாடல்களுக்கு அக்காலத்திலேயே தக்க இசைவாணர்களால் இசையமைக்கப்பட்டுள்ளது. பாடல்களுக்கு உரிய பண் அடைவுகளும் குறிக்கப்பட்டுள்ளன. சைவ-இலக்கிய இசைப்பாடல்களில், தேவாரப் பாடல்களுக்கு இவையே முன்னோடிகள் என்பது அறியத்தக்கது. முருகன் பிறப்பு, உருவ அமைப்பு, அவன் நிகழ்த்திய போர்கள், அவன் தேவியர், அவன் அருளும் திறம் யாவும் இப்பாடல்களுள் நிறைவாக இடம் பெற்றுள்ளன.

**யாஅம் இரப்பவை**
**பொன்னும் பொருளும் போகமும் அல்ல! நின்பால்**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும் உருள்**
**இணர்க் கடம்பின் ஒலி தாரோயே**

என்ற பரிபாடல் வரிகள், சங்க காலத் தமிழர் வழிபாடு, பொருள் நாட்டம் இல்லாது, பண்புகளை நாடும் சிறப்புடையதாய்த் திகழ்ந்தமையை அடையாளம் காட்டி நிற்கிறது.

**குறுந்தொகை - கடவுள் வாழ்த்து**

கடைச்சங்க இலக்கியங்களுள் முருகன் தொடர்பான குறிப்புகள் நிறைவாக இடம் பெற்றுள்ளன. அரிய பல தொடர்களும் காணப்படுகின்றன. குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து முருகனைச் சிறப்பித்துக் கூறுவது. பாரதம் பாடியபெருந்தேவனார் பாடியது. இப்பாடலில், முருகன் திருமேனி அழகு, அவன் தன் கை வேலால் குன்றைத் துளைத்தமை, அவனது சேவல் கொடி முதலியன குறிக்கப்பட்டுள்ளன.

**"தாமலை புரையும் காமர் சேவடி**
**பவழத்து அன்ன மேனி, திகழ்ஒளி**
**குன்றி ஏய்க்கும் உடுக்கை, குன்றின்**
**நெஞ்சு பக எறிந்த அம்சுடர் நெடுவேல்**
**சேவல் அம் கொடியோன் காப்ப,**
**ஏம வைகல் எய்தின்றால் உலகே"**

என்பது அவ்வழகிய பாடல்.

**பதிற்றுப்பத்துள் முருகன்**

முருகன் அசுரரை அழித்தமை, கிரவுஞ்ச மலையைப் பிளந்தமை, சேவல் கொடியைப் பெற்றமை, சூரனை வென்றமை, தேவர்கள் சேனைத் தலைவனாகத் திகழ்ந்தமை, தேவர் துயர் தீர்த்தமை, முருகன் பிறப்பு வரலாறு, மயில் ஊர்தியை அடைந்தமை, மாமரம் தடிந்தமை, வள்ளியை மணம்முடித்தமை முதலிய பல செய்திகளைச் சங்க நூல்கள் பதிவு செய்துள்ளன. முருகன் கடல் நடுவே சென்று சூரனை வெற்றி கொண்ட திறத்தை,

**"நளி இரும் பரப்பின் மாக்கடல் முன்னி**
**அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்**
**சூருடை முழுமுதல் தடிந்த பேர் இசை**
**கடுஞ்சின விறல் வேள்"**

என்று பதிற்றுப்பத்துள் ஒரு பாடல் எடுத்துக் காட்டுகிறது. பிற்காலத்தில் எழுந்த முருக இலக்கியங்களுக்கு இத்தகு பதிவுகள் பெரிதும் ஏற்றமாக அமைந்தன. கடைச்சங்க காலக் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு. இவை பெரும்பாலும் அறம் உரைப்பன. சமண ஆசிரியர்களால் பாடப்பெற்றன. சைவசமயம் சார்ந்த தனிப்பாடல்களோ, அரிய தொடர்களே இவற்றுள் காணப்படவில்லை.

- தொடரும்

# இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பாவில்

தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி, நெடிய இலக்கிய வரலாற்றையும், வளத்தினையும், உடைய மொழி, காலந்தோறும் அறிஞர்கள் தோன்றித் தமிழுக்கு வளம் சேர்த்தனர். இராமலிங்க வள்ளலார் சோதியாய், சுடரொளியாய் வாழ்ந்தவர், ஒளி வழிபாட்டில் உயர்வு கண்டவர்.

சீவகாருண்யத்தை ஒழுக்கநெறியாக, வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தியவர். பசிப்பிணி மருத்துவர், தருமச்சாலை கண்ட தகைமைசால் சான்றோர், அருட்சோதி வழிபாட்டை அருளியவர், ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைக் கொள்கைக்கு வடிவம்



கொடுத்து வளர்த்த அன்புருவர்.

இக்கட்டுரையில் இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பாவில் காணலாகும் உலக அமைதிச் சிந்தனைகளைத் தொகுத்து ஆராயலாம்.

**ஆன்மநேய ஒருமைப்பாடு**

மன்னுயிர்த் தொகுதியெல்லாவற்றையும் ஓர் இனமெனக் கருதி எல்லா உயிர்களிடத்தும் அன்புடையராயொழுகும் ஒருமையுணர்வின் இன்றியமையாமைக் குறிப்பது ஆன்மநேயமாகும். ஆன்மா - உயிர், நேயம் - அன்பு, ஒருமை - அன்பெனும் பாசத்தால் எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணும் மனத்தின் ஒருமைப்பாடு, உயிர் என்பது காட்சிக்குப் புலனாகாத அருவப்பொருள்.

'ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டுமென' இறைவனை இறைஞ்சி எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணும் தபோதனருள் ஒருவராகிய அருட்பிரகாச வள்ளலார், இக்கால மக்கள் உய்திபெறும் நிலையில் அறிவுறுத்திய செந்நெறிக் கொள்கையே 'ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை' யாகும்.

**'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்**
**தம் உயிர்போல் எண்ணி உள்ளே**
**ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்**
**யாவர் அவர் உளந்தான் சுத்த**
**சித்துருவாய் எம் பெருமான் நடம்புரியும்**
**இடம் என நான் தெரிந்தேன் அந்த**
**வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட - என்**
**சிந்தை மிக விழைந்த தாலோ'**

(திருவருட்பா - 5298)

**'எவ்வுயிர்த்திரளும் என்னுயிரெனவே**
**எண்ணிநல் இன்புறச் செயவும்**
**அவ்வுயிர்களுக்கு வரும் இடையூற்றை**
**அகற்றியே அச்சநீக்கிடவும்**
**செவ்வையுற் றுனது தீப்பதம் பாடிச்**
**'சிவ சிவ' வென்று கூத்தாடி**
**ஒவ்வுறுகளிப்பால் அழிவுறாதிங்கே**
**ஓங்கவும் இச்சை காண் எந்தாய்'**

## 'உலகஅமைதிச் சிந்தனைகள்'

(திருவருட்பா - 3403)

இத்திருவருட்பா பனுவல்களை மனதிற் கொண்டால் உலகில் அனைவரும் ஒன்றே என எண்ணும் எண்ணம் வரும் என்பது உறுதி.

டாக்டர். **எஸ். ஈஸ்வரன்,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி.,
திருச்சிராப்பள்ளி

**இரக்க உணர்வு**

பிற உயிர்கள் படும் துன்பத்தினைக் கண்டால் அறிவுடைய நன்மக்கள் உள்ளத்திலே இரக்கவுணர்வு தன்னியல்பில் தோன்றுவதாகும். இத்தகையை இரக்கங்காரணமாகப் பிற உயிர்களின் துயரங்களைப் போக்குவதற்கு முயலும் அருளாளர்களின் கருணைத் திறம் கொல்லாமை, புலாலுண்ணாமை, ஏழைகளின் பசி தீர்த்தல் என்னும் இம்மூவகை அறங்களிலும் படர்ந்து செயல்படுவதாகும்.

மேற்குறித்த மூவகை அறங்களுள்ளும் பொருட்செல்வம் உடையோர், ஏழைத் தொழிலாளர் முதலிய பலதிறமக்களும் தம் வாழ்வில் எளிதிற் கடைப்பிடித்தற்குரிய தலைசிறந்த அறமாகத் திகழ்வது, பசியால் வாட்டமுற்றவர்களின் பசிப்பிணியைத் தீர்த்தலாகிய 'அன்னதானம்' ஒன்றேயாகும்.

பசித்தோர்க்கு உணவளித்தலின் இன்றியமையாமையினை அருட்பிரகாச வள்ளலார் தாம் இயற்றிய 'சீவகாருண்ய ஒழுக்கம்' என்ற உரைநடை நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

'பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்வதில் வருமின்பம் பர இன்பமாகும். அவை இம்மையில் யோகசித்திகளாலும், ஞானசித்திகளாலும் வருகின்ற இன்பங்களும், முடிவில் அனுபவிக்கப்படும் மோட்சஇன்பமும் ஆகுமென்றறிய வேண்டும். உண்பதற்கு ஆகாரமில்லாமல் சோர்வடைந்த சீவர்களுக்குச் சீவகாருண்யத்தால் ஆகாரம் கொடுக்க, உண்டு பசி நீங்கிய தருணத்தில், அந்தச் சீவர்களுக்கு அகத்தினிடத்தும், முகத்தினிடத்தும் தழைத்துப் பொங்கித் ததும்புகின்ற இன்பமும், அதுகண்டபோது கொடுத்தவர்களுக்கு அகத்திலும் முகத்திலும் அவ்வாறுண்டாகிற இன்பமும், ஆன்ம சகிதமாகிய கடவுள் கரணத்தில் பூரணமாகத் தோன்றுகின்றவையாதலால் பரஇன்பம் என்றறிய வேண்டும்' என்கிறார் வள்ளலார்.

பிறர்பால் இரக்கம் கொண்டு அவர்கட்கு உணவளித்து வாழ்ந்தால் மக்கள் எவ்விதத் துன்பமுமின்றி வாழலாம் என்பதை இதன்வழி அறியலாம்.

**பசிப்பிணி மருத்துவர்**

**'வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்**
**வாடினேன் பசியினால் இளைத்தே**
**வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த**
**வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்'**

உலகியல் வாழ்விற் பசியின் கொடுமையினை உள்ளவாறுணர்ந்து உள்ளங்கவன்ற இராமலிங்கவள்ளலார் மக்கட்சமுதாயத்திலே பசிப்பிணியினை அறவே நீக்கத் திருவுளங் கொண்டு சீவகாருண்ய ஒழுக்கத்தை அன்றாட நடைமுறையில் செயற்படுத்துவதற்கென்றே உத்தர ஞானசிதம்பரம் எனப்பெறும் வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவிப் பசிப்பிணி மருத்துவராகத் திகழ்ந்தார் என்பதை உணரலாம்.

**தெய்வமணி மாலை**

இராமலிங்க வள்ளலார் தம் இளம் பருவத்திலேயே சென்னையில் கந்தகோட்டத்தில் எழுந்தருளிய முருகப்பெருமானைப் போற்றிப் பரவிய நூல் செந்தமிழ்ப்பனுவல் தெய்வமணிமாலை என்பதாகும்.

**'ஒருமையுட னினதுதிரு மலரடி நினைக்கின்ற**
**உத்தமர்தம் உறவு வேண்டும்**
**உள்ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்**
**உறவு கலவாமை வேண்டும்**
**பெருமைபெறு நினது புகழ் பேச வேண்டும்**
**பொய்மை பேசா திருக்க வேண்டும்**
**பெருநெறி பிடித்தொழுக வேண்டும்**
**மதமானபேய் பிடியாதிருக்க வேண்டும்**
**மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்**
**உனை மறவாதிருக்க வேண்டும்**
**மதிவேண்டும் நின் கருணை நிதி வேண்டும்**
**நோயற்ற வாழ்வில்நான் வாழ வேண்டும்**
**தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத்**
**துள்வளர்**
**தலம் ஓங்கு கந்தவேளே**
**தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி**
**சண்முகத் தெய்வமணியே** (8)

மனைவாழ்க்கைக்கு மாறான பெண்ணாசையை மறத்தலும், உயிர்க்குயிராகிய இறைவனை மறவாதிருத்தலும், நல்லறிவும், அருட்செல்வமும், பொருட்செல்வமும், நோயற்ற வாழ்வும், எங்களுக்கு அளித்தருளல் வேண்டும் என இறைவன் முன் நின்று வேண்டுதலும் ஆக உலகமக்கள் அனைவருக்கும் உரிய உயர்ந்த வேண்டுகோளனைத்தும் அமைய வள்ளலார் இப்பாடலைப் பாடிய திறம் வியந்து பாராட்டுதற் குரியதாகும்.

**பெண்மை பேணுக**

சன்மார்க்கத்தின் சிறப்புக்களுள் ஒன்று, ஆண், பெண் சமத்துவம். பால் வேற்றுமை வழி

ஏற்றத் தாழ்வோ, இழிவோ எண்ண இங்கே எள்ளளவும் இடமில்லை. ஆண்மையிலே பெண்மையும், பெண்மையிலே ஆண்மையும் கலந்துள்ளன. இவ்வேற்றுமை உடலைப் பொறுத்தேயல்லால் உள்ளத்தையும், ஆன்மாவையும் பொறுத்ததன்று. ஆண், பெண் என்னும் நாம பேதம் வருவானேன்? அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால் என்க. ஆன்ம அறிவு - ஆண், ஜீவ அறிவு-பெண் இரண்டும் புத்தி மன அறிவுகளாகும் என்பது வள்ளலார் கருத்து. வேற்றுமை அகற்றி இருவரும் எல்லாத் துறைகளிலும் சமமாக முன்னேற வேண்டும் என்பதே சுத்த சன்மார்க்கத்தின் உட்கிடக்கை. ஆண்கள் ஞான மார்க்கத்தில் தடையின்றி முன்னேற வேண்டுமானால், பெண்களும் அத்துறையில் ஞானம் பெற்றிருக்க வேண்டுவது இன்றியமையாதது என்ற உண்மையைத் தாமும் உணர்ந்து பிறர்க்கும் உணர்த்தியவர் வள்ளலார்.

**பிறருக்காக வாழ்தல்**

இவ்வுலகில் காற்று, நீர், நெருப்பு, விண், மண் என்னும் ஐம்பொருளும் தங்களுக்காகச் செயல்படுவதில்லை. நமக்காகவே இயங்குகின்றன. உலகியல் பொருள்கூட நமக்கு நலம் புரிகின்றன. மரம், செடி, கொடி, விலங்குகள், பறவைகள் யாவும் பிறருக்கெனவே செயல்படுகின்றன. ஆனால் இவற்றையெல்லாம் கண்டும் துய்த்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதன் இவற்றுக்கென வாழாமல், தன்னலத்துக்காகவே வாழ்கின்றான். ஊர் நடுவே அமைந்த ஊரணி, பழமரம், மருந்துமரம் ஆகியவை தம்மைத் தாம் பிறர்க்கு ஈந்து உதவுகின்றன. வேண்டாது கழித்த வைக்கோலை மாடு தின்று வளமான பாலை நமக்களிக்கிறது. தாளால் உண்ட நீரினைத் தேங்காயாகத் தலையாலே தான் தந்து கொண்டிருக்கின்றது தென்னை மரம்.

**இன்னா செய்யாமை**

பிறர்க்கு நல்லது செய்ய வேண்டும். முடியாவிட்டால் அல்லதாவது செய்யாதிருக்க வேண்டும். இவை துன்பமானவை எனத் தன் வாழ்வில் கண்டுணர்ந்தனவற்றை மற்றவர்களுக்குச் செய்யாது இருத்தல் வேண்டும். இதனையே சீன ஞானி கன்பூசியசும், 'பிறர் உனக்கு என்னென்ன தீமை புரியக்கூடாது என நீ எண்ணுகிறாயோ அவற்றை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே' என்று கூறுகின்றார்.

**அமைதி முறை**

'இராமலிங்கர் ஆற்றும் உபதேசம் சாத்வீக முறையில் அமைந்தது. மூடராக உள்ளவரையும் தம் உபதேசத்தால் நல்வழிக்குக் கொணர முடியும் என்ற தன்னம்பிக்கையோடு இயம்பி ஐந்து வழிகளைக் காட்டியிருக்கிறார். (திருவருட்பா, உரைநடைப்பகுதி, ப.356) அவை 1. நல்ல வார்த்தை சொல்லுதல் 2. மிரட்டிச் சொல்லுதல் 3 தொண்டன் விழுந்து சொல்லுதல் 4. பொருளைக் கொடுத்து வசப்படுதல் 5. ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்தல் இவற்றைப் பிறரும் மேற்கொள்ள வேண்டுமென்று இவர் கட்டளையிட்டார்.

'இப்போது நீங்கள் இதுவரைக்கும் ஒழுக்கத்துக்கு வராமல் எவ்வளவு தாழ்ந்த மனுவீர்களாயிருந்தாலும் சாலைக்குப் போகக் கொஞ்சதினமிருக்கிறது. அதுக்குள்ளாக நீங்கள், நீங்கா நல்லொழுக்கத்திற்கு வருவதோடு கூட மற்றவர்களையும் நமது ஒழுக்கத்திற்கு வரும்படி எவ்விதத் தந்திரமாவது செய்து நம்மவர்களாக்கிக் கொள்ள வேண்டியது. நீங்கள் கொஞ்ச தினத்துக்கு அப்படிச் செய்து கொண்டிருங்கள்' (திருவருட்பா, உரைநடைப்பகுதி ப.357) என்ற ஈன்ற தாயைப் போன்று கனிவோடும், பணிவோடும், அமைதியோடும் உபதேசம் புரிதல் உற்றுநோக்கத்தக்கது. இவ்வாக்கியங்களைத் தொடர்ந்து ஆன்மநேயத்தை வெளிப்படுத்தக் கூடிய வாசகங்களைக் கையாண்டுள்ளார்.

**ஆன்மநேயக் கூறுகள்**

திருவருட்பா ஆறாம் திருமுறையில் இடம்பெற்றிருக்கும் பல பாடல்களில் செய்யும் நெறி காணப்படுகின்றது. சிறிது கடுமை கலந்து சொல்லும் அந்த அறிவுரையில் ஆன்மநேயக்கூறுகள் புலப்பட்டு நிற்கின்றன. மாந்தரிடம் இயல்பாக நிகழக்கூடிய குற்றங்களும், அவற்றை நீக்கிவிட்டு வள்ளலார் அவர்களிடம் எதிர்பார்ப்பையும் முறையே பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளன.

பசியோடு வந்தவரைப் பார்க்க விரும்பாமை,

**பசியோடு வந்தாரை வரவேற்று அன்னமளிக்க வேண்டும்**

அன்போடு இரப்பார்க்கு ஒன்று ஈயாமை

**கருணையோடு யாசிப்பவர்க்கு ஒன்று ஈதல் வேண்டும்**

வறியவர்க்குப் பிச்சையிட்டுப் பிறகு உண்ணாமை,

**ஏழைகளுக்கு ஐயமிட்டு பின்பு உண்ண வேண்டும்**

வட்டிமேல் வட்டியாக வாங்கிக் கடன்பட்டவனைத் துன்புறுத்தல்,

**வட்டி வாங்காத நெறியைப் பின்பற்ற வேண்டும்.**

பசியோடு கிடப்பவர்க்குப் பழங்கஞ்சி கூடக் கொடுக்க நினையாமை

**பசியோடு இருப்பவர்க்குப் பருக நீராகாரமேனும் கொடுத்துதவ வேண்டும்.**

பல தெய்வங்கள் உண்டென்று கழறுதல்,

**தெய்வம் ஒன்றே என்று சித்தத்தோடு திகழ வேண்டும்.**

சாதி சமய மத நெறிகளிலும் சாத்திரச் சந்தடிகளிலும், கோத்திரச் சண்டையிலும் விருப்பம் வைத்தல்,

**சாதி சமய சாத்திரம், கோத்திரம் ஆகியன வற்றைப் பொருட்படுத்தாமை வேண்டும்.**

தாழ்ந்த மக்களிடத்துக் கருணை கொள்ளாது இகழ்ச்சி செய்தல்,

**தாழ்ந்த மக்களை இகழ்ச்சி செய்யாது அவர்களுக்கு அருள வேண்டும்.**

புலை கொலைகள் புரிதல்,

**புலை கொலைகளை அறவே நீக்குதல் வேண்டும்,**

இறைவன் உரைத்த சன்மார்க்கத்தை மறந்து புன்மார்க்கமான துன்மார்க்கத்தினை நாடுதல்

**துன்மார்க்கம் துறந்து சன்மார்க்கம் நாட வேண்டும்**

தன்னுயிர் போல் மண்ணுயிரையும் எண்ணாமை,

**தன்னுயிர் போல் மண்ணுயிரை மதித்து நடக்க வேண்டும்**

உயர்ந்த, தாழ்ந்த குலமென்று வகுத்து வேற்றுமை பாராட்டுதல்,

**குலவேற்றுமை களைந்து சன்மார்க்கமாகிய புனிதகுலத்தை எய்த வேண்டும்.**

இவ்வாறு மக்களிடம் இருக்கக்கூடிய குறைகளை எடுத்துக் கூறி, ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உணர்வினால் அவர்கள் குறைகளை ஒதுக்க வேண்டும் என விரும்பியவர் வள்ளலார். இத்தகைய வேணவாக் கொண்ட வள்ளலாரின் ஈர நெஞ்சத்தை எவ்வளவு போற்றினாலும் அவ்வார்த்தைகள் எல்லாம் சரியானவைகளாக அமையாது.

இராமலிங்க வள்ளலாரின் உலக அமைதிச் சிந்தனைகள் என்றென்றும் மனங்கொள்ளத்தக்கவைகளாகும் என்பதை இதன்வழி அறியலாம்.


ஆதார நூல்கள் :


1. இராமலிங்கர் - திருஅருட்பா முதல் ஐந்து, ஆறாம் திருமுறைகள், ஊரன் அடிகள் (பதிப்பு ஆசிரியர்), சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர் - 1989.
2. இராமலிங்கர் - திருஅருட்பா உரைநடைப் பகுதி இரண்டாம் பதிப்பு, ஊரன் அடிகள் (பதிப்பு ஆசிரியர்), இராமலிங்கர் பணி மன்றம், சென்னை - 1981.




கடத்தைப் பழித்துக் களபம்
திமிர்ந்து கனகமணி
வடத்தைத் தரித்துச் சுணங்கு
படர்ந்தொளிர் வள்ளிதன்
தடத்தைத் தழுவும் தனது
மலர்க்கைத் தலத்தினில், குக்
குடத்தைப் பிடித்தவன் சட்டியை
நோக்கக் குறைவில்லையே

\- தனிப்பாடல்



# அண்ணாமலையானே போற்றி!

பஞ்ச பூதத் தலங்களுள் ஒன்று - நினைத்தாலே முக்தி தரும் தலம் - அண்ணலின் ஒளி வடிவே மலையாக நிற்கும்பூமி - அடிமுடி காணாத பிரம்மனுக்கும், திருமாலுக்கும் ஆணவம் அழிந்த தலம் - அர்த்தநாரீஸ்வரர்கோலம் பூண்ட பூமி - கார்த்திகை தீபத்தின் காரணக்கோயில் ஆதாரத் தலங்களில் மணிப்பூரகத்தலம் - பல்லவன், சோழன், விஜயநகர மன்னன், நகரத்தார் எனப் பலராலும் திருப்பணி செய்யப்பட்ட ஆலயம் - ஹொய்சால மன்னன் காலத்தில் தலைநகராகத் திகழ்ந்த நகரம் - நால்வரால் பாடப்பெற்ற தலம் - அருணகிரிநாதரை ஆட்கொண்ட கோயில் - விருபாஷ தேவர், குகை நமச்சிவாயர், குருநமச்சிவாயர், தெய்வசிகாமணி, அருண்மொழித்தேவர், ரமணமகரிஷி, சேஷாத்திரி சுவாமிகள், விசிறி சாமியார் என எண்ணற்ற மகான்களை கவர்ந்த ஆலயம் - நூற்றுக்கணக்கில் கல்வெட்டுக்கள் நிறைந்த திருக்கோயில் - மடங்களும், அன்னதானக் கூடங்களும் நிறைந்த ஊர் என, பெருமைகளை பட்டியலிடவே முடியாத அளவிற்கு பெருமைகளும், சிறப்புக்களும் கொண்ட திருத்தலமாக திகழ்வது, திருவண்ணாமலை.


### பெயர்க்காரணம்

அண்ணாமலையார், அருணாசலேஸ்வரர் என அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் இறைவன், ஒளி உருவில் மலையாக உருவம் கொண்டதை நம்பிய மக்கள், இங்குள்ள மலையை அண்ணல்மலை என அழைத்தனர். அண்ணல்மலை நாளடைவில் மருவி, அண்ணாமலையானது. இதனுடன் திருஇணைந்து திருவண்ணாமலை ஆனது.

சங்க இலக்கியங்களில் இம்மலையை 'நன்னன் மலை' என வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### தலப்பெருமை

**"தில்லையில் காண, காசியில் இறக்க**
**சிறக்கும் ஆரூர் தனிற்பிறக்க**
**எல்லையில் பெருமை அருணையை நினைக்க**
**எய்தலாம் முக்தி"** - என்கிறது எல்லப்ப நாவலர் அருளிய அருணாச்சலப்புராணம், நினைத்தாலே





அருள்மிகு அருணாச்சலேசுவரர் அருள்தரு உண்ணாமலையம்மன்



செப்பேடுகளும் இங்கேயுள்ளன. இக்கல்வெட்டுக்களில் பழைமையானது, முதலாம் பராந்தகனின் (கி.பி. 922) கல்வெட்டு ஆகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரும், சம்பந்தரும் இத்திருக்கோயிலைப் பாடியுள்ளதால், பல்லவர் காலத்திலேயே இத்திருக்கோயில் சிறப்புடன் விளங்கியதை அறிய முடிகின்றது.

**கல்வெட்டுக்களில் இறைவன்**

திருவண்ணாமலை ஆண்டார், திருவண்ணாமலை மகாதேவர், திருவண்ணாமலை ஆழ்வார், அண்ணா நாட்டு உடையார் என இறைவனுக்கு பல்வேறு திருப்பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. என்றாலும், இன்றைய பெயர் அண்ணாமலையார், அருணாச்சலேஸ்வரர் என்பது.

அபிதகுஜா நாயகி, உண்ணாமலை நாச்சியார், திருக்காமக் கோட்ட நம்பிராட்டியார் என குறிப்பிடப்பட்டாலும், இன்றைய பெயர், அபீதகுஜாம்பிகை, உண்ணாமலையம்மை என்பதே.

**புராணங்களில் திருவண்ணாமலை**

பிரம்மாவுக்கும், விஷ்ணுவுக்கும் தங்களில் யார் பெரியவர் என்ற பிரச்சினை ஏற்பட்டது. தீர்ப்பு வேண்டி, சிவபெருமானை வேண்டினர். ஆதியும், அந்தமும் இல்லாத ஜோதி ரூபமாக காட்சி தந்த இறைவன், "யார் என்னுடைய திருவடியை அல்லது திருமுடியை தொடுகிறார்களோ அவரே உயர்ந்தவர்" என்று கூறினார். பிரம்மன் பறவை உருவம் கொண்டு திருமுடியை தேடினார். திருமாலோ வராக உருவம் கொண்டு திருவடியை தேடலானார். முடிவில் இருவருக்கும் தோல்வியே மிஞ்சியது. சிவபெருமானே உயர்ந்தவன் என்ற உண்மை இருவருக்கும் புரிந்தது. இந்நிகழ்ச்சியை நினைவுபடுத்தும் விதமாக கொண்டாடப்படுவதே கார்த்திகைத் தீபத் திருவிழா.

முக்திதரும் தலமாகத் திகழ்வது திருவண்ணாமலை. எனவேதான் இத்தலத்திற்கு முக்திபுரி என்ற பெருமையும் உண்டு.

பஞ்சபூதத் தலங்களுள் இது அக்கினித் தலமாக திகழ்கிறது. சூரியன், சந்திரன், பிரதத்தராஜன், அஷ்டவசுக்கள், பிரம்மன், திருமால், புளகாதிபன் முதலானோர் வழிபட்டு அருள்பெற்ற தலம்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், நக்கீரர், கபிலர், பட்டினத்தார், வள்ளலார் முதலானோர் பாடி வழிபட்ட தலம். ஆதிசங்கரர் இயற்றிய அருணாச்சல அஷ்டகமும் குறிப்பிடத்தக்கது.

மாணிக்கவாசகர் பல காலம் இத்தலத்தில் தங்கியிருந்து திருவெம்பாவை, திருவம்மானை ஆகிய பதிகங்களை இயற்றி அருளியுள்ளார்.


அருணகிரிநாதர் திருப்புகழ், கந்தரனுபூதி இயற்றிய தலம் - ரிஷிகள், தேவர்கள், மகான்கள் வழிபட்ட கோயில்.

நடுநாட்டுத் தலங்களுள் முதன்மையான திருக்கோயிலாகவும் இது திகழ்கின்றது.

இவற்றையெல்லாம் கடந்து, காலகாலமாய் அடியார் கூட்டத்தை கவர்ந்து இழுக்கும் ஆலயமாக திகழ்வது குறிப்பிடத்தக்க அம்சம்.

**கல்வெட்டுகள்**

இந்தியத் தொல்லியல் துறையின் ஆய்வில் 119 கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. இதன் மூலம் ஆலயத் திருப்பணிகள், ஆட்சி செய்த மன்னர்களின் விவரங்களை எளிதாக அறிய முடிகிறது. தமிழ், சமஸ்கிருதம், கன்னடம் ஆகிய மொழிகளில் இக்கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன. மைசூரை ஆண்ட கிருஷ்ணராய உடையாரின்





இந்த காட்சியான லிங்கோத்பவர் கோலம் அனைத்து சிவாலயங்களிலும் இன்றும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### அர்த்த நாதீஸ்வரர்

அன்னை பார்வதி, சிவபெருமானின் கண்களை, விளையாட்டாக மூட, உலகமே இருளில் மூழ்கியது. ஜீவராசிகள் பெரும் துன்பமடைந்தன. இதற்கு பரிகாரமாக காஞ்சி மாநகரம் சென்று மணலில் லிங்கத்தை உருவாக்கி அன்னை வழிபட்டு வந்தார். அங்கு தோன்றிய இறைவன் பார்வதியை திருவண்ணாமலை சென்று தவமிருக்குமாறு ஆணையிட்டார். அதன்படியே திருவண்ணாமலையில் உள்ள பவழக்குன்று மலைமீது பர்ணசாலை அமைத்து தவம் செய்து வந்தார். மகிஷாசுரன் இத்தவத்திற்கு இடையூறு செய்து வந்தான். அன்னை துர்க்கை வடிவம் ஏற்று மகிஷனை வதம் செய்தாள். கார்த்திகை மாதம் பவுர்ணமியுடன் கூடிய கிருத்திகை பிரதோஷ காலத்தில் மலைமேல் ஜோதி ஸ்வரூப தரிசனம் கண்டு, சிவனிடம் இருந்து இடது பாகத்தை பெற்று அமர்ந்தாள். இதனை முன்னிட்டும் கார்த்திகை தீபதிருவிழா கொண்டாடப்படுகிறது. இதைக் குறிக்கும் வகையில் கார்த்திகை தீபத்தன்று சரியாக மாலை 6.00 மணிக்கு அர்த்தநாதீஸ்வரர் மூர்த்தி எழுந்து காட்சி தருவது ஐதீகமாக உள்ளது. ஒரு சில நொடிகளே காட்சி தரும் அர்த்தநாதீஸ்வரரைக் காண கண் கோடி வேண்டும்.

### அருணகிரிநாதர்

வாழ்வில் மனமுடைந்த அருணகிரிநாதர் வள்ளாள மகாராஜ கோபுரத்தில் ஏறி தன் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்தார். அப்போது முருகப்பெருமான் அவரைத் தாங்கி உயிர்காத்து அருளினார். இதன் பின்னரே திருப்புகழ் தோன்றியது. இதே போல் விஜயநகர மன்னனின் கண்நோய் தீர, கூடு விட்டு கூடு பாயும் வகையில் இறந்த கிளிக்கு உயிர் கொடுத்து தன் உடலை ஓர் இடத்தில் வைத்து விட்டு, கிளி உருவம் கொண்டு சொர்க்கத்தில் உள்ள பாரிஜாதம் மலரை கொண்டு வந்த அருணகிரிநாதர், தன் உடலை காணாத நிலையிலும் கந்தரனுபூதி பாடினார். அதன் நினைவாகவே கிளி கோபுரமும், கிளியின் உருவமும் அமைந்துள்ளன.

கம்பத்து இளையனார் சன்னதி, ரமணர் வழிபட்ட பாதாள லிங்கம் ஆயிரம் கால் மண்டபம் என பலவும் இவ்வாலயத்தில் அமைந்துள்ளன.

### ஆலய அமைப்பு

24 ஏக்கர் பரப்பளவில் 6 பிரகாரங்கள் 9 இராஜகோபுரங்களுடன் மலையடிவாரத்தில் கீழ் திசையில், கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இராஜகோபுரம் 11 நிலைகளில் 217 அடி உயரத்தில் கம்பீரமாக விண்ணை முட்டி நிற்கின்றது. இது தென்னிந்தியாவின் இரண்டாவது உயரமான கோபுரமாகும்.

### கம்பத்து இளையனார் சன்னதி

இராஜகோபுரத்தை அடுத்து இடதுபுறம் இச்சன்னதி அமைந்துள்ளது. விஜயநகர மன்னனால் கட்டப்பட்டது. இறைவன் பிரபுட தேவமகாராஜன் முன்னிலையில் சம்பந்தன் அருணகிரியிடம் ஆணவ சவால் விடுக்க அருணகிரிநாதரின் வேண்டுகோளுக்கு இணங்கிய முருகப்பெருமான் கம்பத்தில் தோன்றி அருணகிரிநாதருக்கு அருள்புரிந்தார் என புராணம் கூறுகிறது. அதனால் இவ்விறைவன் கம்பத்து இளையனார் என்று பெயர் பெறுகின்றார்.

தெற்கே திருமஞ்ஞன கோபுரம், மேற்கே பேய் கோபுரம், வடக்கே அம்மணி அம்மாள் கோபுரம், பிரதானமாக அமைந்துள்ளன. ரமணர் தவமிருந்து வழிபட்ட பாதாளலிங்கம், ஆயிரங்கால் மண்டபம் என அனைத்தும் ஒருங்கே அமைந்துள்ளன.

சிவகங்கை தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் ஆகியவை ஆலயத்திற்கு உள்ளே அமைந்துள்ளன. மற்றொரு தீர்த்தமான சோனை தீர்த்தம் ஆலயத்திற்கு வெளியே அமைந்துள்ளது. தலமரம், மகிழ மரம்.

### சம்பந்த விநாயகர்

இறைவன் கருவறையின் முன்புறத்தில் மிகப் பெரிய செந்தூர நிற விநாயகர் சன்னதி உள்ளது. விசிறி சாமியார் இச்சன்னதியின் கீழே அமருவதை வழக்கமாக வைத்திருந்தார் என்று கூறப்படுகிறது.

### விழாக்கள்

6 கால பூஜை, பஞ்ச பருவ உற்சவங்கள் நடைபெறுகின்றன. சித்திரையில் பத்து நாட்கள் வசந்த உற்சவம், வைகாசியில் விசாகம், ஆனியில் பத்து நாள் பிரம்மோற்சவம் மற்றும் திருமஞ்சனம் - நடராஜர் உற்சவம், ஆடியில் பத்து நாள் பிரம்மோற்சவம் மற்றும் சுந்தரர் உற்சவம், ஆவணியில் விநாயக சதுர்த்தி மற்றும் ஆவணி மூல உற்சவம், புரட்டாசியில் ஒன்பது

நாள் நவராத்திரி உற்சவம், ஐப்பசியில் அன்னாபிஷேகம் மற்றும் ஆறு நாள் கந்த சஷ்டி உற்சவம், கார்த்திகையில் ஸ்ரீ துர்க்கை, பிடாரி மற்றும் விநாயகர் உற்சவங்களில் தொடங்கி சண்டிகேஸ்வரர் விழா முடிய மொத்தம் பதினேழு நாட்கள் மகாபிரம்மோற்சவ விழா, மார்கழியில் வைகுண்ட ஏகாதசி மற்றும் ஆருத்ரா தரிசனம், தையில் பத்து நாட்கள் உத்திராயண புண்ணிய கால உற்சவம், திருவூடல் உற்சவம் மற்றும் மணலூர்ப் பேட்டை தீர்த்தவாரி உற்சவம் மற்றும் கலசபாக்கம் ரத சப்தமி தீர்த்தவாரி, மாசியில் மகாசிவராத்திரி மற்றும் மாசிமக பள்ளிக்கொண்டாபட்டு தீர்த்தவாரி, பங்குனியில் ஆறு நாட்கள் உத்திரப் பெருவிழா என விழாக்களுக்கு பஞ்சமில்லை.

### மலையின் மகிமை

பொதுவாக மலைமீது தான் இறைவன் இருப்பது வழக்கம். ஆனால் மலையே இறைவனாக இருப்பது திருவண்ணாமலையில் மட்டுமே காணப்படும் சிறப்பு. மலையின் உயரம் 2668 அடி. மலையின் சுற்றுபாதை 14 கி.மீ. நீளம் ஆகும். கிரிவலப் பாதையின் பல இடங்களில் இருந்து மாறுபட்ட பல வடிவங்களில் மலை காட்சி தருவது குறிப்பிடத்தக்க அம்சம் அருணன் என்றால் சூரியன் என பொருள். அசலம் என்றால் கிரி அல்லது மலை என்று பெயர். ஜோதி வடிவாக இறைவன் மலை உருவில் காட்சி தருவதால் அருணன்-அசலம் என்பது அருணாசலம் ஆனது. மலையைச் சுற்றி எட்டு திக்கிலும் எட்டு சிவலிங்கங்கள் அமைந்துள்ளன.

அண்ணாமலை லிங்க வடிவில் இருப்பதாலும், சித்தர்கள் சூட்சம வடிவில் இங்கே உலா வருவதாலும் மலையை சுற்றும் பக்தர்களின் பிரச்சனைகளும், நோய்களும் தீரும் என்பது ஐதீகம். பவுர்ணமி தினம் மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிறப்புகள் உண்டு என்பதால் அதற்கேற்ப மலையைச் சுற்றலாம்.



### அமைவிடம்

நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் திருவண்ணாமலைக்கு போக்குவரத்து வசதி உள்ளது. சென்னையில் இருந்து தென்மேற்கே 190கி.மீ. விழுப்புரத்தில் இருந்து வடமேற்கே 60 கி.மீ., திருப்பதியில் இருந்து 190 கி.மீ., தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. விமானம் மூலம் வரவிரும்புவோர் சென்னை வந்து வரவேண்டும். இரயில் மார்க்கமாக வரவிரும்புவோர் சென்னை, விழுப்புரம், காட்பாடி ஆகிய இடங்களில் இருந்தும், பஸ் மார்க்கமாக வர விரும்புவோருக்கு தமிழகத்தின் முக்கிய நகரங்களில் இருந்தும் பேருந்து வசதிகள் உண்டு.

### தங்கும் வசதி

இவ்வூரில் நூற்றுக்கு மேற்பட்ட தங்கும் விடுதிகள் உள்ளன. அறநிலையத்துறை சார்பில் உண்ணாமுலை அம்மன் தங்கும் விடுதி, அப்பர் இல்லம், ஒய்வு விடுதி என தங்கும் விடுதி வசதிகள் உண்டு.

### தரிசன நேரம்

காலை 5.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரையிலும், மாலை 3.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் ஆலயம் திறந்திருக்கும். விழாக்கால நாட்களில் கூடுதல் நேரம் திறந்திருக்கும்.

வரும் நவம்பர் மாதம் 24ம் தேதி இச்சிறப்புமிகு திருக்கோயில் கார்த்திகை தீப திருவிழா கொண்டாடப்படவுள்ளது. பிறவி பயன் வேண்டுவோர் அவசியம் கலந்து கொள்ள வேண்டிய விழா இது என்றால் அது மிகையல்ல.

- பனையபுரம் அதியமான்

படங்கள் :

நன்றி : திருவண்ணாமலை ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில்

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப. சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் இந்து சமய அறநிலையத் துறை, சென்னை - 600 034. தொலைபேசி எண் : 28334811 / 12 / 13
ஆசிரியர் (கூ.பொ) : ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் : சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை - 86. தொலைபேசி : 23450920 / 28117575



# அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில்

வல்லக்கோட்டை, திருப்பெரும்புதூர் - 602 105.

Website : www.vallakkottaimurugantemple.com / Email : vallakkottaimurugan@sancharnet.in

"வந்தாரை வாழவைக்கும் வல்லக்கோட்டை முருகன்
இழந்த செல்வங்களை மீட்டுத்தரும் வல்லக்கோட்டை முருகன்
நினைத்தது நடக்கும், கேட்டது அருளும் வல்லக்கோட்டை முருகன்"

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூரில் இருந்து 10 கி.மீ. தொலைவில் வல்லக்கோட்டை கிராமத்தில் கோடையாண்டவர் என்று அழைக்கப்படும், அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோயிலில் ஏழு அடி உயரத்தில் கோடையாண்டவர் கிழக்கு நோக்கி வள்ளி தெய்வானையுடன் காட்சி தருவது தனிச்சிறப்பு.

ஸ்ரீ அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப் பெற்ற தலமாகும். வல்லன் என்ற மன்னன் ஆண்டு வந்ததால் வல்லன்கோட்டை என்ற பெயர் பெற்றது, மறுவி வல்லக்கோட்டை என்று மாறியது. பகீரத மன்னன் தனது ஆணவம் நீங்கி வழிபட்ட தலமாகும். இத்திருத்தலத்தில் ஸ்கந்த சஷ்டி திருவிழா இவ்வாண்டு 9.11.2007 முதல் 16.11.2007 முடிய சிறப்புற நடைபெற உள்ளது. பக்தகோடிகள் அனைவரும் கலந்து கொண்டு வல்லக்கோட்டை முருகனின் திருவருள் பெற வேண்டுகிறோம்.

இத்திருக்கோயிலில் ராஜகோபுரம், சுற்றுப்பிரகார மண்டபம், வாகன மண்டபம், முன் மண்டபம் ஆகிய திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணி வேலைகளுக்கு உபயதாரர்களும், நன்கொடைதாரர்களும் வரவேற்கப்படுகிறார்கள்.

இத்திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு சென்னை, தாம்பரம், தி.நகர், சைதாப்பேட்டை, திருவள்ளூர், செங்கற்பட்டு, திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் ஆகிய நகரங்களில் இருந்து பேருந்து வசதிகள் உண்டு.

இங்ஙனம்


திரு. **வி. சுந்தரமூர்த்தி** எம்.ஏ.,
நிர்வாக அதிகாரி

திரு. **எம். ஜானகிராமன்**
அறங்காவலர் குழுத் தலைவர்

அறங்காவலர்கள்

திரு. **ஆர்.பி. தர்மலிங்கம்**, திரு. **எம். வெங்கடேசன்**, திருமதி. **குமுதாகார்த்திகேயன்**, திரு. **எஸ்.ஏ. சண்முகம்**

பதிவு எண் : TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/06-08



திருவண்ணாமலை

# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்

## திருக்கார்த்திகை தீபத்திருவிழா 2007ம் ஆண்டு அழைப்பிதழ்

பஞ்சபூதத் தலங்களில் அக்கினித்தலமான இத்திருக்கோயிலின் திருக்கார்த்திகை தீபத்திருவிழா இவ்வாண்டு 12.11.2007 முதல் 28.11.2007 வரை கீழ்க்கண்ட விரபப்படி வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

| ஆங்கில தேதி | தமிழ் வருடம் மாதம் | தேதி | கிழமை | விழா விபரம் | உற்சவம் வாகனங்கள் விவரம் |
|---|---|---|---|---|---|
| 12.11.2007 | சர்வஜித்து வருடம் ஐப்பசி மற்றும் கார்த்திகைத் திங்கள் | ஐப்பசி 26 | திங்கள் | | ஸ்ரீதுர்க்கையம்மன் உற்சவம் |
| 13.11.2007 | | 27 | செவ்வாய் | | ஸ்ரீபிடாரி அம்மன் உற்சவம் |
| 14.11.2007 | | 28 | புதன் | | ஸ்ரீவிநாயகர் உற்சவம் |
| 15.11.2007 | | 29 | வியாழன் | 1 | கொடியேற்றம் (காலை 8.05 மணிக்குமேல் 9.05 மணிக்குள் |
| 16.11.2007 | | 30 | வெள்ளி | 2 | வெள்ளி இந்திர விமானம் |
| 17.11.2007 | | கார்த்திகை 1 | சனி | 3 | சிம்மவாகனம், வெள்ளி அன்ன வாகனம் |
| 18.11.2007 | | 2 | ஞாயிறு | 4 | வெள்ளி கற்பக விருட்சம் காமதேனு வாகனம் |
| 19.11.2007 | | 3 | திங்கள் | 5 | வெள்ளி ரிஷப வாகனம் |
| 20.11.2007 | | 4 | செவ்வாய் | 6 | வெள்ளி ரதம் |
| 21.11.2007 | | 5 | புதன் | 7 | மகா ரதம் (காலை 6.05 மணிக்குமேல் 7.05 மணிக்குள் வடம் பிடித்தல்) |
| 22.11.2007 | | 6 | வியாழன் | 8 | மாலை 4.00 மணிக்கு ஸ்ரீபிட்சாண்டவர் உற்சவம், இரவு குதிரை வாகனம் |
| 23.11.2007 | | 7 | வெள்ளி | 9 | கைலாய வாகனம் காமதேனு வாகனம் |
| **24.11.2007** | | **8** | **சனி** | **10** | **காலை 4.00 மணிக்கு பரணி தீபம் மாலை 6.00 மணிக்கு மகா தீபம்** |
| 25.11.2007 | | 9 | ஞாயிறு | தெப்பல் | இரவு ஸ்ரீ சந்திரசேகரர் தெப்பல், ஸ்ரீபெரிய நாயகர் கிரிபிரதக்ஷணம் |
| 26.11.2007 | | 10 | திங்கள் | தெப்பல் | ஸ்ரீபராசக்தி அம்மன் தெப்பல் |
| 27.11.2007 | | 11 | செவ்வாய் | தெப்பல் | ஸ்ரீசுப்பிரமணியர் தெப்பல் |
| 28.11.2007 | | 12 | புதன் | | ஸ்ரீசண்டிகேசுவரர் உற்சவம் |

அனைவரும் இவ்விழாவில் பங்குகொண்டு நினைத்தாலே முக்தி தரும் அண்ணாமலையார் மற்றும் உண்ணாமுலையம்மனின் திருவருள் பெற வேண்டுகிறோம்.

**பி. வாசுநாதன்**, எம்.ஏ., பி.எல்.,
துணை ஆணையர் / செயல் அலுவலர்

**வ. தனுசு**, எம்.எஸ்ஸி.,
தலைவர், அறங்காவலர்குழு

அறங்காவலர்கள்

**பெ. கோவிந்தன், க. மணிவர்மா, அ. பானுமதி, இர. சீனிவாசன்**